Registered as a Newspaper
பக்கங்கள் 16 விலை ரூ. 50

புதன் பொய்கை

# உதயன்

சுடர் : 38
கதிர் : 305
புதன்கிழமை 27 செப்ரெம்பர் 2023
புரட்டாதி 10 ஆம் நாள் – வள்ளுவர் ஆண்டு 2054



# தியாக திலீப மழையில் நனைந்தது தாயகம்!

## உணர்வெழுச்சியுடன் அஞ்சலி கொட்டும் மழைக்குள் மக்கள் அலை

யாழ்ப்பாணம், செப்ரெம்பர் 27

தியாகதீபம் திலீபனின் 36ஆவது அஞ்சலி நிகழ்வுகள் யாழ்ப்பாணம் நல்லூர்ப் பகுதியில் அமைந்துள்ள திலீபனின் நினைவுத் தூபியில் கொட்டும் மழைக்கு மத்தியில் நேற்று உணர்வுபூர்வமாக முன்னெடுக்கப்பட்டன. அத்துடன் தாயகத்தின் இதர பகுதிகளிலும் புலம்பெயர் தேசங்களிலும் திலீபன் பல்லாயிரம் மக்களின் கண்ணீருக்குள் ஆத்மார்த்தமாக அஞ்சலிக்கப்பட்டான்.

»15

விரிவுகள்:- பக் - 11 இல்

## திலீபனின் தியாகவேள்வி சிறுவர்களால் ஆற்றுகை!

சுதந்திரபுரத்தில் முன்மாதிரி

## இந்தியத் தூதரகத்தின் பாதுகாப்பு அதிகாரி பலாலிக்கு வருகை!

இந்திய அமைதிப்படையினுடைய நினைவுத்தூபியையும் பார்வையிட்டார்



## திலீபனை அஞ்சலிக்க திருமலையில் தடை!

அவரை மனதிலிருத்தி கதிரைக்கு அஞ்சலிப்பு

திருகோணமலை, செப். 27

தியாகதீபம் திலீபனின் நினைவஞ்சலியானது நேற்றுத் திருகோணமலை, குளக்

»15

## போர்க்குற்றம் புரிந்த இலங்கையை சர்வதேச நீதிமன்றில் நிறுத்துக!

விரிவு:- பக்.11






# 2024 பாதீடு நவம்பர் 13!




**கொழும்பு, செப். 27**

**2024ஆம் நிதியாண்டுக்கான வரவு - செலவுத்திட்டம் எதிர்வரும் நவம்பர் 13ஆம் திகதி நாடாளுமன்றத்தில் முன்வைக்கப்படவுள்ளது.**

நிதி அமைச்சர் என்ற வகையில் ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்க பாதீட்டை முன்வைத்து உரையாற்றவுள்ளார். அதன்பின்னர் நவம்பர் 14ஆம் திகதி 2ஆம் வாசிப்பு மீதான விவாதம் ஆரம்பமாகும். 2ஆம் வாசிப்பு மீதான வாக்கெடுப்பு நவம்பர் 21ஆம் திகதி இடம்பெறவுள்ளது. 3ஆம் வாசிப்பு மீதான விவாதம் நவம்பர் 22ஆம் திகதி ஆரம்பமாகும். டிசெம்பர் 13ஆம் திகதி பாதீடு மீது இறுதி வாக்கெடுப்பு நடத்தப்படும். 2024ஆம் நிதியாண்டுக்கான பாதீட்டை நாடாளுமன்றத்தில் முன்வைக்க அமைச்சரவை அனுமதி வழங்கியுள்ளது.

நடப்பு நிதியாண்டுக்கான பாதீட்டில் தேர்தல்களுக்காகப் பெருந்தொகைப் பணம் ஒதுக்கப்பட்ட போதிலும் திறைசேரியால் அந்த நிதி விடுவிக்கப்படாமல் தேர்தல்கள் பிற்போடப்பட்டன. இதற்கு எதிர்க்கட்சிகள் தொடர்ந்து எதிர்ப்புத் தெரிவித்துவரும் நிலையில், 2024ஆம் நிதியாண்டுக்கான பாதீட்டையும் எதிர்க்கட்சிகள் ஓரணியில் நின்று வலுவாக எதிர்ப்பது இப்போதே கிட்டத்தட்ட உறுதியாகியுள்ளது. (அ-ம-44)

## கிளிநொச்சியில் அடிகாயங்களுடன் இளைஞனின் சடலம்

கிளிநொச்சி, செப். 27

கிளிநொச்சி, கோணாவில் பிரதேசத்தைச் சேர்ந்த இளைஞர் ஒருவர் ஊற்றுப்புலம் பகுதியில் நேற்று முன்தினம் திங்கட்கிழமை பின்னிரவு சடலமாக மீட்கப்பட்டுள்ளார்.

அடிகாயங்களுடன் சடலமொன்று வீதியில் காணப்பட்டதை அவதானித்த மக்கள் இது தொடர்பில் பொலிஸாருக்குத் தகவல் வழங்கியுள்ளனர். இதையடுத்து சம்பவ இடத்துக்கு விரைந்த பொலிஸார் சடலத்தை மீட்டு கிளிநொச்சி மாவட்ட மருத்துவமனைக்கு உடற்கூற்றுப் பரிசோதனைக்காக அனுப்பி வைத்தனர்.

கிளிநொச்சி, கோணாவில் பகுதியைச் சேர்ந்த புஸ்பராசா தினேஸ்கரன் (வயது- 30) என்பவரே இவ்வாறு சடலமாக மீட்கப்பட்டவராவார். மேலதிக விசாரணைகளை பொலிஸார் மேற்கொண்டுள்ளனர். (அ -ம-113)

## பேருந்தில் திருட்டு: நான்கு பேர் கைது

மன்னாரில் இருந்து திருகோணமலை நோக்கிப் பயணித்த பேருந்தில் 20 பவுண் நகைகளைத் திருடிய குற்றச்சாட்டில் இரண்டு பெண்கள் உட்பட நான்கு பேர் நேற்றுக் கைது செய்யப்பட்டுள்ளனர் என்று வவுனியா குற்றத்தடுப்புப் பொலிஸார் தெரிவித்தனர்.

மேற்படி பேருந்தில் முருங்கன் பகுதியில் இருந்து ஆசிரியரான பெண் ஒருவரும் பயணித்துள்ளார். பேருந்து வவுனியா மாவட்டச் செயலகத்துக்கு முன்பாக பயணித்தபோது அவர் பேருந்தில் இருந்து இறங்கியுள்ளார். இதன்போதே அவர் தன் கைப்பை திருடப்பட்டதை அவதானித்துள்ளார். கைப்பைக்குள் சுமார் 20 பவுண் நகைகள் இருந்துள்ளன. உடனடியாகப் பேருந்தை நிறுத்தித் தேடியபோதும் கைப்பை கிடைக்கவில்லை. இதையடுத்து விடயம் தொடர்பில் வவுனியா குற்றத்தடுப்புப் பிரிவு பொலிஸாரிடத்தில் முறையிடப்பட்டது. முறைப்பாட்டுக்கமைய விசாரணைகள் முன்னெடுக்கப்பட்ட போதே கைப்பையைத் திருடிய குற்றச்சாட்டில் இரண்டு பெண்கள் உட்பட நால்வர் கைதுசெய்யப்பட்டனர். நகைகள் மீட்கப்பட்ட துடன், சந்தேகநபர்களிடம் மேலதிக விசாரணைகள் முன்னெடுக்கப்பட்டன. (ம-18)

## திலீபன் நினைவாக பயன்தரு மரக்கன்று



யாழ்ப்பாணம், செப். 27

தியாகதீபம் திலீபனின் 36ஆவது ஆண்டு நினைவேந்தலின் இறுதி நாளை முன்னிட்டு நல்லூரில் அமைந்துள்ள தியாகதீபம் திலீபனின் நினைவுத் தூபிக்கு அருகில் வைத்து நேற்று மரக்கன்றுகள் வழங்கப்பட்டன.

நேற்றுச் செவ்வாய்க்கிழமை முற்பகல் 11 மணியளவில் 'உரும்பிராய் உதவும் நண்பர்கள்' அமைப்பால் மேற்படி பயன்தரு மரக்கன்றுகள் வழங்கி வைக்கப்பட்டன. (ம-66)

## இலக்கிய விழாவும் அங்குரார்ப்பணமும்

யாழ்ப்பாணம், செப். 27

இலக்கிய மாதத்தை முன்னிட்டு இலக்கிய விழாவும் குமாரசாமிப் புலவரின் எழுத்தாக்கங்களை உள்ளடக்கிய புலவரகம் சேகரிப்புக் கூடத்தின் அங்குரார்ப்பண நிகழ்வும் இன்று புதன்கிழமை பிற்பகல் 2.30 மணியளவில் சுன்னாகம் பொதுநூலக மண்டபத்தில் நடைபெறவுள்ளது.

சுன்னாகம் பொதுநூலகத்தினரின் ஏற்பாட்டில் வலிகாமம் தெற்குப் பிரதேசசபையின் செயலாளர் திருமதி சாரதா உருத்திரசம்பவன் தலைமையில் இடம்பெறவுள்ள நிகழ்வில் அமெரிக்காவைச் சேர்ந்த ஓய்வுநிலைப் பொறியியலாளர் செ.சண்முகபாஸ்கரன் பிரதம விருந்தினராக பங்கேற்கவுள்ளார். (ச-66)

## நாட்டில் ஏற்பட்டுள்ள பிரச்சினையை எதிர்கொள்ள அணுகுமுறைகளில் மாற்றம்!

ஜனாதிபதி தெரிவிப்பு

கொழும்பு, செப். 27

இலங்கையின் பிரச்சினைகளை செயற்றிறனுடன் தீர்ப்பதற்கு தற்போதுள்ள முறைமைகளில் மாற்றம் செய்யப்பட வேண்டியது அவசியம் என்று ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்க தெரிவித்தார்.

கொழும்பில், நேற்று இடம்பெற்ற நிகழ்வொன்றிலேயே அவர் இவ்வாறு தெரிவித்தார்.

அவர் மேலும் தெரிவித்ததாவது:-

இலங்கையின் திறந்த பொருளாதாரக்கொள்கையை அமுல்படுத்துவதற்கு பிரச்சினைகளைத் தீர்ப்பதில் காணப்படும் சாதக நிலைமை முக்கியமான பங்கு வகிக்கின்றது.

கொழும்புதுறைமுக நகரத்தை கொழும்பு நிதி வலயமாக மாற்றி யமைப்பதற்கான சட்டவரைவு உருவாக்கும் பணிகள் இடம்பெற்று வருகின்றன. அந்தச் சட்டத்தின் ஊடாக முதலீட்டுச் சபையை, பிரச்சினைகளுக்கு செயற்றிறனுடன் தீர்வுகளை பெற்றுக்கொடுக்கக்கூடிய பொருளாதார ஆணைக்குழுவாக மாற்றியமைக்கத் தீர்மானித்துள்ளோம்.

நாட்டின் போட்டித்தன்மை மிக்க எதிர்காலத்தை பாதுகாப்பதற்காக, இலங்கையின் எல்லைகளுக்கு அப்பால் சென்று செயற்கை நுண்ணறிவு மற்றும் புளொக்செயின், பசுமை வலுசக்தி உள்ளிட்ட வளர்ந்துவரும் துறையில் சிறப்பம்சங்களை உருவாக்க ஒன்றுபடுமாறு சட்ட வல்லுநர்களிடத்தில் கேட்டுக்கொள்கின்றேன்- என்றார். (ம-44)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



# பரபரப்புக் குற்றச்சாட்டுகளை முன்வைப்பவராம் ட்ருடோ!

## அமைச்சர் அலி சப்ரி கூறுகிறார்

**கொழும்பு, செப்.27**

**கனடா பயங்கரவாதிகளின் புகலிடமாக மாறியுள்ளது என இலங்கையின் வெளிவிவகார அமைச்சர் அலி சப்ரி தெரிவித்துள்ளார்.**

அமெரிக்காவில் ஊடகம் ஒன்றுக்குக் கருத்துத் தெரிவித்தபோதே அவர் இவ்வாறு தெரிவித்துள்ளார்.

அவர் மேலும் தெரிவித்துள்ளதாவது:-

உறுதியான ஆதாரங்கள் இன்றி இந்தியாவுக்கு எதிரான குற்றச்சாட்டுகளை கனடா முன்வைத்துள்ளது.

கனடா பிரதமர் ஜஸ்டின் ட்ருடோ ஆதாரமற்ற பரபரப்புக் குற்றச்சாட்டுகளை முன்வைப்பவர் என்பதால் அவரது கருத்துகள் எனக்கு ஆச்சரியமளிக்கவில்லை. சில பயங்கரவாதிகள் கனடாவில் அடைக்கலம் பெற்றுள்ளனர்.

ஆதாரங்கள் அற்ற கடும் குற்றச்சாட்டுகளை முன்வைக்கும் சுபாவம் கனடாப்பிரதமருக்குள்ளது. இலங்கை விவகாரத்திலும் கனடாப் பிரதமர் அவ்வாறு நடந்துகொண்டார். இலங்கையில் இனப்படுகொலை இடம்பெற்றது என்று பெரும் பொய்யைச் சொன்னார். இலங்கையில் இனப்படுகொலை இடம்பெறவில்லை என்பது அனைவருக்கும் தெரியும் - என்றார்.

கனடாவில் சீக்கியச் செயற்பாட்டாளர் ஒருவர் கொல்லப்பட்ட பின்னணியில் இந்திய அரசாங்கம் உள்ளது என்ற கனடாப் பிரதமரின் குற்றச்சாட்டால் இந்தியாவுக்கும் கனடாவுக்கும் இடையில் இராஜதந்திர முறுகல் நிலை உருவாகியுள்ள நிலையில் இலங்கை வெளிவிவகார அமைச்சர் இவ்வாறு கருத்துத் தெரிவித்துள்ளார். (எ-இ)

# கனடாவை எதிர்க்கும் இலங்கை

கொழும்பு, செப்.27

இந்தியா - கனடா விவகாரத்தில் இந்தியாவுக்கு இலங்கை ஆதரவளிக்கின்றது என்று இந்தியாவுக்கான இலங்கைத் தூதுவர் மிலிந்த மொரகொட தெரிவித்துள்ளார்.

சீக்கியச் செயற்பாட்டாளர் கனடாவில் சுட்டுக்கொல்லப்பட்டமையின் பின்னணியில் இந்திய அரசாங்கம் உள்ளது என்று கனடா முன்வைத்துள்ள குற்றச்சாட்டுகளுக்கு இந்தியா வழங்கியுள்ள பதில் உறுதியானது என மிலிந்தமொரகொட தெரிவித்துள்ளார்.

நர்ங்கள் பயங்கரவாதத்தால் பாதிக்கப்பட்டுள்ளோம் எனக் குறிப்பிட்டுள்ள அவர் பயங்கரவாதம் தொடர்பாக சிறிதளவு கூட சகிப்புத்தன்மையை வெளிப்படுத்தக் கூடாது எனவும் தெரிவித்துள்ளார். (எ-இ)

# சுதந்திரக் கட்சியில் மீண்டும் சந்திரிகா!



கொழும்பு, செப்.27

சிறிலங்கா சுதந்திரக் கட்சியின் முன்னாள் தலைவரான சந்திரிகா பண்டாரநாயக்க குமாரதுங்க அம்மையார் விரைவில் கட்சியுடன் இணைந்து பயணிப்பார் என்று சு.க.வின் உப தலைவரும், அமைச்சருமான மஹிந்த அமரவீர தெரிவித்தார் .

இது தொடர்பில் அவர் தெரிவித்ததாவது:-

சிறிலங்கா சுதந்திரக் கட்சியின் மாநாடு வெற்றிகரமாக நடைபெற்றது. இதில் சந்திரிகா அம்மையார் பங்கேற்காவிட்டாலும் 18 பிரதிநிதிகளை அவர் அனுப்பி வைத்திருந்தார்.

சுதந்திரக்கட்சி விரைவில் நல்ல நிலைக்குவரும். சந்திரிகா அம்மையாரும் அப்போது கட்சியில் இணைவார். அதேபோல தயாசிறி ஜயசேகரவும் சுதந்திரக் கட்சியை விட்டுப்போகக்கூடாது. அவர் கட்சியுடன் இணைந்து பயணிக்க வேண்டும் என அழைப்பு விடுக்கின்றேன் - என்றார். (எ-44)

# இலங்கைக் குற்றவாளிகளின் புகலிடம் அரபு இராஜ்ஜியம்!

## அமைச்சர் டிரான் அலஸ் தெரிவிப்பு

கொழும்பு, செப்.27

இலங்கையில் திட்டமிட்ட குற்றங்களில் ஈடுபடுபவர்களில் பெருமளவானவர்கள் ஐக்கிய அரபு இராஜ்ஜியத்திலிருந்தே செயற்படுகின்றனர் என பொதுமக்கள் பாதுகாப்பு அமைச்சர் டிரான் அலஸ் தெரிவித்துள்ளார்.

இலங்கையில் திட்டமிட்ட குற்றச்செயல்களில் ஈடுபடுபவர்கள் ஐக்கிய அரபு இராஜ்ஜியத்தில் குறிப்பாக டுபாயில் வசிக்கின்றனர். அவர்கள் தங்கள் சகாக்கள் மூலம் குற்றச்செயல்களில் ஈடுபடுகின்றனர் எனத் தகவல்கள் வெளியாகியுள்ளன.

இதுதொடர்பாகக் கருத்துத் தெரிவித்தபோதே டிரான் அலஸ் மேற்கண்டவாறு தெரிவித்தார்.

இது தொடர்பாக அவர் மேலும் தெரிவித்துள்ளதாவது-

குற்றச்செயல்களுடன் தொடர்புடையவர்களை இலங்கைக்கு கொண்டுவந்து சட்டநடவடிக்கை எடுப்பது தொடர்பாக ஐக்கிய அரபு இராஜ்ஜியத்துடன் பேச்சுகளில் ஈடுபட்டுள்ளோம்.

குறிப்பிடத்தக்க எண்ணிக்கையிலானவர்கள் ஐக்கிய அரபு இராஜ்ஜியத்தில் உள்ளனர். எனினும் துல்லியமான எண்ணிக்கை தெரியாது - என்றார். (எ-இ)

# ஒதுக்கீட்டு சட்டவரைவுக்கு அங்கீகாரம்

2024ஆம் நிதியாண்டுக்கான ஒதுக்கீட்டு சட்டவரைவைத் தயாரிப்பதற்கு அமைச்சரவை அங்கீகாரம் வழங்கியுள்ளது.

சட்டவரைஞரால் தயாரிக்கப்பட்டுள்ள 2024ஆம் நிதியாண்டுக்கான ஒதுக்கீட்டு சட்டவரைவுக்கு சட்டமா அதிபரின் ஒப்புதல் கிடைத்துள்ளது என்று தெரிவிக்கப்படுகின்றது.

இந்தச் சட்டவரைவை வர்த்தமானியில் வெளியிடுவதற்கும், நாடாளுமன்ற அங்கீகாரத்துக்கு சமர்ப்பிக்கவும் நிதியமைச்சர் ரணில் விக்கிரமசிங்க முன்வைத்த யோசனைக்கு அமைச்சரவை அங்கீகாரம் வழங்கியுள்ளது. (எ-இ)




அற்பனுக்குப் பவிசு வந்தால் அர்த்தராத்திரியில குடை பிடிக்கிற காலம் மாறிப்போய், இப்ப அற்பனுக்கு 'பவர்' வந்தால் அகிம்சை நாளிலை தான் அபிவிருத்திக் கூட்டம் வைப்பினமாம் எண்டநிலை வந்திட்டுது. தமிழரின்ர பிரச்சினை சம்பந்தமா ஏதும் ஹர்த்தால் நடந்தாலோ, இல்லாட்டி திலீபன்ர நினைவேந்தல் நாள் எண்டாலோ அண்டைக்குத்தான் மாவட்ட அபிவிருத்திக் குழுக் கூட்டத்தைக் கூடவேணும் எண்டு விடாப்பிடியா நிக்கிறாராம் இணைத்தலைவரான அமைச்சர். இந்தமுறையும், நேற்று திலீபன்ர நினைவுநாளிலதான் கிளிநொச்சி மாவட்ட அபிவிருத்திக் குழுக் கூட்டம் நடந்திருக்கு. இப்பிடியான நாளில கூட்டத்தை வைச்சாத்தானே அந்த ஹர்த்தாலையோ, நினைவேந்தலையோ குழப்பலாம். அங்க போறவையை கூட்டத்துக்கு வர வைக்கலாம். அதவிட இன்னொரு லாபமும் அமைச்சருக்கு இருக்குது.

அங்க அமைச்சர் தன்ர இஷ்டப்படி ஏதும் திட்டங்களைக் கொண்டுவந்தால், அதிகாரிமாரெல்லாம் தலையாட்டத்தான் வேணும். அதில உள்ள நன்மை, தீமையளை அவையள் எப்பிடி அமைச்சரிட்ட சொல்ல ஏலும்? ஆனால் கூட்டமைப்பு, முன்னணி எம்.பிக்கள் அந்த அபிவிருத்திக் குழுக் கூட்டத்துக்குப்போனால்,எல்லாத்திட்டங்களையும், முடிவுகளையும் அக்குவேற ஆணிவேறாப் பிரிச்சு மேய்ஞ்சு போடுவினம். அதால தான் நினைச்சபடி அமைச்சரால முடிவெடுக்க ஏலாமல் இருந்தது. ஆனால் உந்த ஹர்த்தால், நினைவேந்தல் எண்டால் கட்டாயம் கூட்டமைப்பு எம்.பி.மாரோ, முன்னணி எம்.பி.மாரோ கூட்டத்துக்கு வரமாட்டினம். அதாலதான் இப்பிடியான நாள்களை அமைச்சர் செலக்ட் பண்றாராம். ஹர்த்தால், நினைவேந்தலைக் குழப்பினமாதிரியும் இருக்கும், தான் நினைச்சபடி எல்லா முடிவையும் எடுக்கவும் முடியும். ஒரே கல்லில ரண்டு மாங்காய் அடிக்கலாம் எண்டதுதான் அவரின்ர எண்ணம். 'எங்களுக்கு கூட்டத்துக்கு நாள் வைக்கேக்க ஹர்த்தால் எண்டோ, நினைவேந்தல் எண்டோ தெரியாது. தெரிஞ்சால் வைச்சிருக்க மாட்டம்' எண்டும் அமைச்சரோ, அதிகாரியளோ ஆருக்கும் பூச்சுத்தவும் முடியாது.

போனமுறை ஹர்த்தால் நடக்கேக்க கூட்டத்துக்கு நாள் குறிச்சு எல்லாருக்கும் அறிவிச்சவை. ஆனால் அண்டைக்கு ஹர்த்தால் எண்டதால கூட்டத்தை இன்னொரு நாளில வைக்கச் சொல்லி கூட்டமைப்பு எம்.பி.மார் கடிதமொண்டு அனுப்பினவை. அந்தக் கடிதத்துக்கு ஓம் எண்டோ, இல்லையெண்டோ ஒரு மறுமொழியும் வரேலை. சொன்னநாளில கூட்டத்தை வைச்சு, அமைச்சர் தனித்தவில் வாசிச்சிருக்கிறார். ஒவ்வொரு வருசமும் செப்ரெம்பர் 26 திலீபன்ர நினைவுநாள் எண்டது உலகத்துக்கே தெரியும். அந்தநாளில கூட்டத்தை வைக்கிறதுக்குப் பேர் விசமம். ஆனால் விசமத்தோட இப்பிடிக் கூட்டம் வைச்சாப் போல நினைவேந்தலுக்கு ஆக்கள் போகமாட்டினம் எண்டு நினைக்கிறதோ, ஹர்த்தாலுக்கு கடையளை அடைக்கமாட்டினம்எண்டுநினைக்கிறதோ எவ்வளவு பேய்த்தனம் எண்டதைக் காலம் சொல்லத்தானே போகுது.



- பட்சி


padsi@uthayan.com

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

ஓம் விராட் விஸ்வப் பிரம்மணே நம
அருள்மிகு
காளி அம்பாள் தேவஸ்தானம்
கன்னாதிட்டி, யாழ்ப்பாணம்.
**கேதார கௌரி விரதம்**
அம்பிகை அடியார்களே!
• விரதாரம்பம்: 24.10.2023 செவ்வாய்க்கிழமை
• விரத பூர்த்தி: 13.11.2023 திங்கட்கிழமை
கேதாரகௌரி விரதம் அனுஷ்டிக்கும் அடியார்கள் தங்கள் பெயர் நட்சத்திரங்களை 29.09.2023 வெள்ளிக் கிழமை முதல் பதிவுசெய்து கொள்ளலாமென்பதை தெரிவித்துக்கொள்கின்றோம்.
கோவில் திறந்திருக்கும் நேரம்
காலை : 6.00 மணி முதல் 9.00 வரை
மதியம் : 11.30 மணி முதல் 12.30 வரை
மாலை : 4.00 மணி முதல் 6.00 வரை
வெள்ளி, செவ்வாய்
காலை : 6.00 மணி முதல்12.30 வரை
தேவஸ்தான ஆதீன கர்த்தாக்கள்
(cs279) (N.1)

நல்லூர் பல நோக்குக் கூட்டுறவுச் சங்கம்
ஆடியபாதம் வீதி, திருநெல்வேலி.
**பாரவூர்திகள் விற்பனைக்கு**
சங்கத்திற்கு சொந்தமான 24 ஸ்ரீ 9364, 26 ஸ்ரீ 5071 இலக்கம் IZUZU ரக பாரவூர்திகள் விற்பனைக்குண்டு. இதனை வாங்குவதற்கு விரும்புவோர் வேலை நாள்களில் காலை 9.00 மணி தொடக்கம் பி.ப. 4.00 மணிக்குள் பார்வையிட்டு பெறுமதியினை குறிப்பிட்டு கூறுவிலையினை 14.10.2023 திகதிக்கு முன்னர் தலைவர், நல்லூர் பலநோக்குக் கூட்டுறவுச் சங்கம், ஆடியபாதம் வீதி, திருநெல்வேலி எனும் முகவரிக்கு பதிவுத் தபால் மூலம் அனுப்பிவைக்கவும்
தலைவர்,
நல்லூர் பலநோக்குக் கூட்டுறவுச் சங்கம்
தொ.பே.:இல. 021 222 2143
(cr.40652) (N.1)

2 ஆம் ஆண்டு நினைவஞ்சலி



மலர்வு 18 . 06 . 1966
உதிர்வு 18 . 09 . 2021

**அமரர் சதாசிவம் வேல்மாறன்**
வாழ வயதிருந்தும் வாழ்ந்திட
மனமிருந்தும்
தாளலயம் மாறா வாசிக்கும் திடம்
இருந்தும்
தோள் கொடுக்க நட்பிருந்தும்
தூய அன்புத் துணையிருந்தும்
வாழ்வைத் துறந்து ஏனோ விட்டு நீர்
சென்ற தெங்கே ?
தங்களின் ஆன்மா இறைவனின் பொற்பாதங்களில் சாந்தி பெறப் பிரார்த்திக்கின்றோம்.
82/4, கலட்டி அம்மன் வீதி,
யாழ்ப்பாணம்.
உங்கள் நினைவுடன்,
குடும்பத்தினர்
(cs 26389 M-1)

# திலீபனின் நினைவேந்தல் நாளில் ஒருங்கிணைப்புக்குழுக் கூட்டம்

## மக்கள் பிரதிநிதிகள் புறக்கணிப்பு

**கிளிநொச்சி, செப்.27**

**கிளிநொச்சி மாவட்ட அபிவிருத்திக்குழுக் கூட்டம் நேற்று நடைபெற்ற நிலையில், மக்கள் பிரதிநிதிகள் பலர் கூட்டத்தைப் புறக்கணித்துள்ளனர்.**

கூட்டம் நேற்றுக் காலை 9 மணியளவில் அமைச்சர் டக்ளஸ் தேவானந்தா தலைமையில் ஆரம்பமானது. கூட்டத்தில் மக்கள் பிரதிநிதிகளுக் காக ஒதுக்கப்பட்ட ஆசனங்கள் வெறுமையாகக் காணப்பட்டன.

தியாகிதிலீபனின் நினைவேந்தல் நிகழ்வுகள் தாயகப் பகுதிகளில் நேற்று நடைபெற்றதாலேயே, தமிழ்க் கட்சிகளின் பிரதிநிதிகள் கூட்டத்தில் கலந்துகொள்ள வில்லை.

இந்தக் கூட்டத்தில், கிளிநொச்சி மாவட்டச் செயலர், மாகாண அமைச்சுகளின் செயலாளர்கள், பிரதேச செயலாளர்கள், திணைக்களத் தலைவர்கள், அதிகாரிகள், உத்தியோகத்தர்கள், பாதுகாப்புத் தரப்பினர், பொலிஸார் உள்ளிட்டோர் கலந்துகொண்டனர். (எ-இ)

# 13 பவுண் நகைகள் சுன்னாகத்தில் திருட்டு

## வெளிநாட்டு நாணயங்களும் அபேஸ்

யாழ்ப்பாணம், செப். 27

பதின்மூன்று பவுண் நகைகள் மற்றும் வெளிநாட்டு நாணயம் என்பன சுன்னாகம் பொலிஸ் பிரிவுக்குட்பட்ட பகுதியில் உள்ள வீடொன்றில் நேற்றுத் திருடப்பட்டுள்ளன.

நேற்று நண்பகல் 12 மணிக்கும் 1.30 மணிக்கும் இடைப்பட்ட நேரத்தில் இந்தத் திருட்டு இடம்பெற்றுள்ளது. வீட்டின் உரிமையாளர்கள் பிள்ளைகளைப் பாடசாலையில் இருந்து அழைத்து வருவதற்காகச் சென்றபோதே இவ்வாறு நகைகள் மற்றும் பணம் என்பன திருடப்பட்டுள்ளன. சம்பவம் தொடர்பில் சுன்னாகம் பொலிஸ் நிலையத்தில் முறைப்பாடு பதிவுசெய்யப்பட்டுள்ளது. (ம-125)

# யோகா வகுப்பு ஆரம்பம்

வடக்கு மாகாணக் கல்வி அமைச்சின் இளைஞர் விவகார அலகால் உடல், உள மேம்பாட்டுக்காக இலவசமாக நடத்தப்படும் யோகா கற்கைநெறியின் புதிய பிரிவு நல்லூர்க் கந்தன் ஆலயத்தின் பின் வீதியில் அமைந்துள்ள நல்லூர் மங்கையற்கரசி வித்தியாலயத்தில் கடந்த ஞாயிற்றுக்கிழமை காலை 6 மணியளவில் கல்வியமைச்சின் இளைஞர் விவகார அலகின் பயிற்சிப் பிரிவு இணைப்பாளர் வ.யோகநாதன் தலைமையில் ஆரம்பமானது.

இந்த நிகழ்வில் யாழ்ப்பாணப் பல்கலைக்கழக சித்த மருத்துவபீட விரிவுரையாளர் திருமதி வித்தியா பிரசாத் கலந்துகொண்டு சிறப்புரையாற்றினார். (எ-66)

# சொற்பொழிவு

யாழ்ப்பாணம், செப். 27

யாழ்ப்பாணம், நீர்வேலி அருள்மிகு கந்தசுவாமி தேவஸ்தானம் நடத்தும் வாராந்தச் சுக்கிரவாரச் சிறப்புச்சொற்பொழிவு ஆலய சண்முக விலாச மண்டபத்தில் நாளைமறுதினம் வெள்ளிக்கிழமை மாலை 5 மணிக்கு சிவநெறிப்பிரகாசர், சமயஜோதி கதிர்காமன் நிஜலிங்கத்தின் ஒழுங்கமைப்பில் இடம்பெறவுள்ளது.

பரிபாலன சபைத் தலைவர் த.சோதிலிங்கத்தின் தலைமையுரையைத் தொடர்ந்து சிறப்புச்சொற்பொழிவை சைவப்புலவர் பொன். சந்திரவேல் "அஞ்சு முகம் தோன்றில் ஆறுமுகம் தோன்றும்" என்னும் விடயப்பொருளில் வழங்குவார். (ச)

# இன்றைய (ராசிபலன்)

**மேடம்:** எடுத்த காரியம் அனுகூலமாக முடியும். உறவினர்கள் வகையில் எதிர்பார்த்த உதவி கிடைக்கும். உடல் ஆரோக்கியம் மேம்படும். புதிய முயற்சி சாதகமாகும். பணவரவுடன் செலவுகளும் ஏற்படக்கூடும்.

**இடபம்:** புதிய முயற்சிகளைத் தவிர்க்கவும். உடல் ஆரோக்கியத்தில் கவனம் தேவை. குடும்பத்தில் உறவினர்களால் செலவுகள் ஏற்படலாம். அதனால் மகிழ்ச்சியே ஏற்படும். எதிர்பார்த்த காரியம் அனுகூலமாக முடியும்.

**மிதுனம்:** அனுகூலமான நாளாக இருக்கும். சகோதர வகையில் எதிர்பார்த்த காரியம் அனுகூலமாக முடியும். எதிர்பார்த்த பண உதவி கிடைக்கும். சிலருக்கு வீண் செலவு கள் ஏற்படும். மகிழ்ச்சி கிடைக்கும்.

**கடகம்:** எதிலும் பொறுமையைக் கடைப்பிடிப்பது நல்லது. மற்றவர்களால் மறைமுகத் தொல்லைகள் ஏற்படக்கூடும். குடும்பத்தில் சிறு சங்கடம் ஏற்படும். பாதிப்பு எதுவும் இருக்காது.

**சிம்மம்:** சுறுசுறுப்பாகச் செயல்படுவீர்கள். உறவினர்கள் உதவியுடன் சுபநிகழ்ச்சிக் கான பேச்சு சாதகமாக முடியும். நீண்டநாள்களாக எதிர்பார்த்த பணம் இன்று கிடைக்கும். எதிரிகளால் ஏற்பட்ட இடையூறுகள் நீங்கும்.

**கன்னி:** சாதிக்கும் நாளாக அமையும். தன்னம்பிக்கையுடன் செயல் படுவீர்கள். குடும்பத்தில் மகிழ்ச்சி நிலவும். பிள்ளைகள் உங்கள் அறிவுரையை ஏற்றுக்கொள் வார்கள். எதிர்பாராத பணவரவுக்கும் வாய்ப்பு உண்டு.

**துலாம்:** புதிய முயற்சிகளைத் தவிர்க்கவும். சில பிரச்சினைகள் ஏற்பட்டு நீங்கும். பிடிவாதப்போக்கு உங்கள் மன அமைதியை பாதிக்கும். அனுசரித்துச் செல்வது நல்லது.

**விருச்சிகம்:** புதிய முயற்சிகள் வெற்றிகரமாக நிறைவேறும். எதிரிகளால் ஏற்பட்ட தொல்லைகள் விலகும். சகோதரர்களால் ஆதாயம் உண்டாகும். குடும்பத்தில் மகிழ்ச்சி நிலவும்.

**தனுசு:** சாதிக்கும் நாளாக அமையும். எதிர்பாராத பொருள் சேர்க்கை உண்டு. மற்றவர்களுடன் வீண் மனஸ்தாபம் ஏற்படக்கூடும். பேசும்போது பொறுமை அவசியம். லாபம் கூடுதலாகக் கிடைக்கும்.

**மகரம்:** புதிய முயற்சிகளைத் தவிர்க்கவும். வழக்கமான பணிகளிலும் கூடுதல் கவனம் தேவை. உடல்நலம் பாதிக்கப்படலாம். எளிய உறவினர்களுடன் கருத்து வேறுபாடுகள் ஏற்படக்கூடும்.

**கும்பம்:** கருத்துவேறுபாடுகள் நீங் கும். செலவுகள் அதிகரிப்பதால் கையிருப்பு குறையும். உறவினர்களிடம் எதிர்பார்த்த உதவி கிடைக்கும். மனதில் தன்னம்பிக்கை அதிகரிக்கும்.

**மீனம்:** மூன்றாவது நபர்களின் தலையீடு காரணமாக மனஸ்தாபம் ஏற்பட வாய்ப்பு உள்ளது. பிள்ளைகளால் தேவையற்ற செலவுகள் ஏற்படக்கூடும். உணவு விஷயத்தில் கவனம் தேவை.

Digitized by Noolaham Foundation
noolaham.org | aavanaham.org

# யாழ். நகரப் பகுதியில் 'கூட்டுறவு நகர்' திறப்பு



யாழ்ப்பாணம், செப். 27

யாழ்ப்பாணம் பலநோக்குக் கூட்டுறவுச் சங்கத்தின் கூட்டுறவு நகர் விற்பனை நிலையம் யாழ்.நகரின் பிரதான வீதியிலுள்ள சங்கத்துக்குச் சொந்தமான கட்டடத்தில் நேற்றுச் செவ்வாய்க்கிழமை வைபவ ரீதியாகத் திறந்து வைக்கப்பட்டது.

சங்கத்தின் தலைவர் ச.லோகசிவம் தலைமையில் நடைபெற்ற நிகழ்வில் வடக்கு மாகாண கூட்டுறவு அமைச்சின் செயலாளர் பொ.வாகீசன், யாழ்.மாவட்ட கூட்டுறவு அபிவிருத்தி உதவி ஆணையாளர் கே.சந்திரசேகரன், யாழ்.பிரதேச உதவி செயலர் திருமதி றோய் றொபின்சன் சோபிகா ஆகியோர் இணைந்து கூட்டுறவு நகர் விற்பனை நிலையத்தை திறந்து வைத்தனர்.

இந்தக் கூட்டுறவு நகர் விற்பனைக்கூடத்தில் அத்தியாவசியப் பொருள்கள், மரக்கறி மற்றும் பழங்கள் என அனைத்தும் நியாய விலையில் பெற்றுக்கொள்ளமுடியும் என்று அறிவிக்கப் பட்டுள்ளது. நிகழ்வில் சங்கத்தின் பணியாளர்கள், இயக்குநர்கள், பொதுச்சபை உறுப்பினர்கள், பொதுமக்கள் எனப் பலர் கலந்துகொண்டனர். (ச-17)




# நிகழ்வில் உரையாற்றியவர் மயங்கி வீழ்ந்து உயிரிழப்பு

மட்டக்களப்பு, செப். 27

மட்டக்களப்பில் சித்தாண்டி யோகசுவாமி சைவ மகளிர் இல்லத்தில் இடம்பெற்ற நிகழ்வொன்றில் பங்கேற்று உரையாற்றிக் கொண்டிருந்த ஒருவர் திடீரென மயங்கி வீழ்ந்து உயிரிழந்துள்ளார். இந்தச் சம்பவம் நேற்றுமுன்தினம் திங்கட்கிழமை இடம்பெற்றுள்ளது.

மாவடிவேம்பைச் சேர்ந்த சிவசம்பு பாக்கியராசா (வயது-63) என்பவரே உயிரிழந்துள்ளார்.

புலம்பெயர் நாடொன்றில் வசிக்கும் நன்கொடையாளரால் இல்லத்துக்கு வழங்கப்பட்ட 2 இலட்சம் ரூபா பெறுமதியான அரிசி மூடைகள் வழங்கப்பட்டன.

இந்த நிகழ்வில் நன்றியுரை வழங்கியவரே திடீரென மயக்கமுற்று வீழ்ந்த நிலையில் அவரை மருத்துவமனைக்கு கொண்டு செல்லும் போது உயிரிழந்துள்ளார்.

சந்திவெளி பொலிஸார் சம்பவம் தொடர்பில் மேலதிக விசாரணைகளை முன்னெடுத்துள்ளனர். (ச-150)

# மானிய உரப்பதிவும் காலபோகக் கூட்டமும்

சாவகச்சேரி, செப். 27

மறவன்புலவு கமக்கார அமைப்புக்குட்பட்ட நெற்செய்கைக்கான மானிய உரப்பதிவும் காலபோகக் கூட்டமும் இன்று புதன்கிழமை காலை 9 மணி தொடக்கம் பிற்பகல் 2 மணி வரை மறவன்புலவு பொதுநோக்கு மண்டபத்தில் நடைபெறவுள்ளன. அமைப்பின் அங்கத்தவர்கள் தமது தேசிய அடையாள அட்டை, ஏக்கர்வரி செலுத்திய பற்றுச்சீட்டு, வங்கிக் கணக்குப் புத்தகம், சந்தாப் பணம் செலுத்திய பற்றுச்சீட்டு ஆகியவற்றுடன் வருகை தருமாறு அமைப்பின் தலைவர் அறிவித்துள்ளார். (ச-9)



# பங்குத்தந்தை பணிமனை தருமபுரத்தில் திறப்பு விழா

கிளிநொச்சி, செப்.27

கிளிநொச்சி தருமபுரம் சவேரியார் ஆலய பங்குத்தந்தை பணிமனை புகுவிழா சம்பிரதாயபூர்வமாகக் கடந்த திங்கட்கிழமை இடம்பெற்றது.

யாழ் . மறை மாவட்ட ஆயர் ஜஸ்டின் பேனாட் ஆண்டகை பங்கேற்று பணிமனையைத் திறந்து வைத்தார்.

நிகழ்வில் ஆலய பங்குத்தந்தை நிக்சன் கொலிஜ், அயல் தேவாலய பங்குத்தந்தையர்கள் வடக்கு மாகாணசபை முன்னாள் கல்வி அமைச்சர், கிராமஅலுவலர், கிராம பொது அமைப்பினர் உள்ளிட்ட பலர் கலந்துகொண்டனர். (ச-113)

# காலபோகச் செய்கை சுழிபுரத்தில் கூட்டம்

யாழ்ப்பாணம், செப். 27

சுழிபுரம் கமக்கார அமைப்பின் காலபோகச் செய்கைக்கான கூட்டம் எதிர்வரும் 2ஆம் திகதி திங்கட்கிழமை பிற்பகல் 3 மணிக்கு பறாளாய் வீதியிலுள்ள நாவலர் சனசமூக நிலையக் கட்டடத்தில் இடம்பெறவுள்ளது.

இந்தக் கூட்டத்தில் மானிய உர வழங்கல் மற்றும் கட்டாக்காலி கால்நடைகளைக் கட்டுப்படுத்தல் ஆகியவை தொடர்பில் ஆராயப்படும் என்றும் அமைப்பின் தலைவர் அறிவித்துள்ளார். (ச)

# நாகதம்பிரான் கப்பல் திருவிழா இன்னிசைக் கச்சேரி

யாழ்ப்பாணம், செப். 27

வரலாற்றுப் பிரசித்திபெற்ற நாகர்கோவில் நாகதம்பிரான் ஆலய வருடாந்த அலங்கார மஹோற்சவத்தின் கப்பல் திருவிழா எதிர்வரும் சனிக்கிழமை அதிகாலை 4 மணிக்கு இடம்பெறவுள்ளது. அன்றையதினம் விசேட நிகழ்வுகளாக தென்னிந்திய பிரபல திரையிசை பின்னணிப் பாடகி திருமதி நித்தியசிறி மகாதேவனின் இன்னிசைக் கச்சேரி இடம் பெறவுள்ளது.

அத்துடன் நாதஸ்வர கலாநிதி பஞ்சாபிகேசன் நாகேந்திரன், தவில் மேதை அளவெட்டி உதயசங்கர், நாதஸ்வர கலாநிதி பாலமுருகன் குழுவினர், நாதஸ்வர கலாநிதி குமரன் குழுவினர், நாதஸ்வர கலாநிதி வழக்கம்பரை சிவகுமார் குழுவினர், நாதஸ்வர இளவல்கள் சித்தார்த்தன் - பிரதித்தன் குழுவினரின் இசைக்கச்சேரியும் இடம்பெறவுள்ளது என்று அறிவிக்கப்பட்டுள்ளது. (ச)

# சித்திரத்தேர் வெள்ளோட்டம்

யாழ்ப்பாணம், செப். 27

எழுதுமட்டுவாழ் மருதங்குளம் அருள்வளர் ஸ்ரீ மஹா கணபதிப் பெருமான் ஆலய அதிசுந்தர சிற்ப சித்திரத்தேர் வெள்ளோட்டம் இன்று புதன்கிழமை முற்பகல் 10 மணிக்கு இடம்பெறவுள்ளது. (ச-159)

Digitized by Noolaham Foundation
noolaham.org | aavanaham.org

# மரண அறிவித்தல்



தோற்றம் 16 • 11 • 1945

மறைவு 25 • 09 • 2023

## மார்க்கண்டு தேவகுணராசா

மாகியப்பிட்டியைப் பிறப்பிடமாகவும் அரியாலையை வசிப்பிடமாகவும் கொண்ட மார்க்கண்டு தேவகுணராசா நேற்றுமுன்தினம் (25.09.2023) திங்கட்கிழமை கர்த்தருக்குள் நித்திரை அடைந்துவிட்டார்.

அன்னார் காலஞ்சென்றவர்களான மார்க்கண்டு மேரி திரேசா அன்னப்பிள்ளை தம்பதியரின் சிரேஸ்ட புத்திரனும், காலஞ்சென்றவர்களான மாதர் ஜேம்ஸ் தம்பிஜயா செல்வநாயகி தம்பதியரின் மருமகனும், சறோஜினிதேவி அவர்களின் பாசமிகு கணவரும், அனித்தா, ஜேம்சன், வொட்சன் ஆகியோரின் அன்புத் தந்தையும், பத்மறோகான், டயானா, சுகன்யா ஆகியோரின் பாசமிகு மாமனாரும், மேரி அனோஜிக்கா, இனியவன், இசையவன் ஆகியோரின் அன்புப் பேரனும், காலஞ்சென்ற ரதிகுணமலர் சுகிர்தகுணமலர், இருதயராணி, யோககுணராசா, அற்புதகுணராசா நற்குணமலர், வினிதா தேவகுணமலர் ஆகியோரின் அன்புச் சகோதரனும், கருணாகரன், விமலாதேவி, மனோகரன், றஞ்சினிதேவி, செல்வராசா, தோமஸ், குணரட்ணம், சாரதா காலஞ்சென்றவர்களான வசந்தன், ஜெகநாதன் ஆகியோரின் மைத்துனரும் ஆவார்.

அன்னாரின் நல்லடக்க ஆராதனை இன்று (27.09.2023) புதன்கிழமை முற்பகல் 10.30 மணிக்கு 219 ஆசீர்வாதப்பர் வீதியிலுள்ள அவரது இல்லத்தில் நடைபெற்று, பிற்பகல் 3.00 மணிக்கு மாகியம்பதி சென் செபஸ்ரியார் தேவாலயத்தில் திருப்பலி ஒப்புக்கொடுக்கப்பட்டு கொட்டுபனை, அளவெட்டி மேற்கு, அளவெட்டியில் உள்ள புனித செபஸ்ரியார் தேவாலய சேமக்காலையில் நல்லடக்கம் செய்யப்படும். இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

தகவல்:
குடும்பத்தினர்
077 658 9409

(cr 40649 (N-1)

# பெயர் மாற்றம்

மத்தாளோடை புன்னாலைக்கட்டுவனில் வசிக்கும் **குணதீஸ்வரன் ரவிசுஸ்வரி** ஆகிய நான் எனது பெயரை **குணதீஸ்வரன் ரதிஸ்வரி** என மாற்றம் செய்வதோடு இனிவரும் சகல ஆவணங்களிலும் **ரதிஸ்வரி** என்றே கையொப்பம் இடுவேன் என இலங்கை சோசலிச குடியரசு மக்களுக்கு உறுதிப்படுத்துகின்றேன்.

(cs.52286) (N.1))

**குணதீஸ்வரன் ரதிஸ்வரி**

# அந்தியேட்டி அழைப்பு

## அமரர் செல்லையா சுரேஸ்குமார்



தோற்றம் 07.02.1965

மறைவு 28.08.2023

கண்முன்னே வசந்தகாலம் கனவாகிப்
- போனாலும்
எம்முன்னே உங்கள் முகம் எந்நாளும்
- உயிர் வாழும்
சந்நிதி மண் சொந்தமென வேல் ஒளியில்
- மறைந்தாலும்
விண்நின்று விழிதிறந்து எமைக்காத்து
- வழி நடத்துமப்பா!

அன்னாரின் இறுதிக்கிரியைகளில் கலந்து சிறப்பித்த அனைத்து உள்ளங்களிற்கும் நன்றிகளைக் கூறிக்கொண்டு இன்று (27.09.2023) புதன்கிழமை நண்பகல் 12.00 மணியளவில் **இலங்கை வேந்தன் கலைக் கல்லூரி (இல.63, கல்லூரி வீதி, நீராவியடி, யாழ்ப்பாணம்) மண்டபத்தில்** நடைபெற உள்ள ஆத்ம சாந்திப் பிரார்தனையிலும் அதனைத்தொடர்ந்து நடைபெறும் மதியபோசன நிகழ்விலும் கலந்துகொள்ளுமாறு அன்புடன் அழைக்கின்றோம்.

**இந்த அழைப்பைத் தனிப்பட்ட அழைப்பாக ஏற்றுக்கொள்ளுங்கள்**

196/A, நாவலர் வீதி,
யாழ்ப்பாணம்.

குடும்பத்தினர்
077 108 4879

(CS 52180) (N.1)

# மரண அறிவித்தல்



தோற்றம் 08 • 02 • 1934

மறைவு 25 • 09 • 2023

## திருமதி தங்கம்மா கனகசபை

கொல்லங்கலட்டியைப் பிறப்பிடமாகவும், பழைய பொலிஸ் நிலைய வீதி, சுன்னாகம் தெற்கை வசிப்பிடமாகவும் கொண்ட திருமதி தங்கம்மா கனகசபை நேற்றுமுன்தினம் (25.09.2023) திங்கட்கிழமை காலமானார்.

அன்னார் காலஞ்சென்றவர்களான பொன்னையா சின்னத்தங்கம் தம்பதியரின் அன்பு மகளும், காலஞ்சென்றவர்களான செல்லப்பா வள்ளிப்பிள்ளை தம்பதியரின் பாசமிகு மருமகளும், காலஞ்சென்ற கனகசபையின் அன்பு மனைவியும், செல்லமுத்துவின் (கனடா) பாசமிகு சகோதரியும், மல்லிகாதேவி, சந்திராதேவி, விமலாதேவி (அவுஸ்திரேலியா), கருணாநிதி ஆகியோரின் பாசமிகு தாயாரும், இராமசாமி ( ஓய்வுபெற்ற ஆசிரியர்), முருகையா (வியாபாரம்), உதயகுமார் (அவுஸ்ரேலியா), தர்சிகா ஆகியோரின் அன்பு மாமியாரும், உதயகுமார் (கனடா), சிவகுமார் (அமெரிக்கா), சிவதர்சினி (ஆசிரியை - யாழ். திருக்குடும்ப கன்னியர்மடம்), பிரதீபா (கனடா), பிரகாசினி (ஆசிரியை - பளை மத்திய கல்லூரி), பிரசாந்தினி (கனடா), சிந்துஜா (அவுஸ்ரேலியா), பிரவிந்தன் (அவுஸ்ரேலியா), ஜனனி (மாணவி - யாழ். இந்து மகளிர் கல்லூரி), சர்வேஷ் (மாணவன் - யாழ்ப்பாணம் இந்துக் கல்லூரி), சிவாஜினி (கனடா), தனுசா (அமெரிக்கா), சுதாகரன் (யாழ் / கனகரத்தினம் மத்திய மகாவித்தியாலயம்), பஞ்சகரன் (கனடா), பவகேசன் (ஆசிரியர் - யாழ். இந்துக் கல்லூரி), வசீகரன் (கனடா), ஆரணி (அவுஸ்ரேலியா), அமரர் உதயகுமாரி, அமரர்சந்தோஷ் ஆகியோரின் அன்புப் பேர்த்தியும், பிரிசா, பிரஜித், அஸ்வந், சாங்கவி, பங்குசன், அபிசன், சஸ்வின், திவ்யா, டக்சி, பிரவின், பிரணிஜா, பிரகவிஸ், எவலியா, சேஷ் ஆகியோரின் அன்புப் பூட்டியும், ரஞ்சிதமலர், ஜெயமலர், நிர்மலா, சிவகுமார், லலிதா ஆகியோரின் பெரியம்மாவும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் நாளை (28.09.2023) வியாழக்கிழமை அவரது இல்லத்தில் முற்பகல் 11.00 மணியளவில் நடைபெற்று, பூதவுடல் தகனக்கிரியைக்காக கொத்தியாலடி இந்து மயானத்திற்கு எடுத்துச்செல்லப்படும். இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

பழைய பொலிஸ் நிலைய வீதி,
சுன்னாகம் தெற்கு.

077 573 3720
077 690 5857

தகவல்:
குடும்பத்தினர்

(cs 52287) (N-1)

# மரண அறிவித்தல்



தோற்றம் 18 • 03 • 1947

மறைவு 25 • 09 • 2023

## கதிரவேலு மனோன்மணி

சுதுமலையைப் பிறப்பிடமாகவும் கோணாவளை வயாவிளானை வசிப்பிடமாகவும் கொண்ட கதிரவேலு மனோன்மணி நேற்றுமுன்தினம் (25.09.2023) திங்கட் கிழமை காலமானார்.

அன்னார் காலஞ்சென்றவர்களான மாரிமுத்து தெய்வானைப்பிள்ளை தம்பதியரின் அன்புப் புதல்வியும், காலஞ்சென்றவர்களான சித்தர் சோதிப்பிள்ளை தம்பதியரின் பாசமிகு மருமகளும், சித்தர் கதிரவேலுவின் அன்பு மனைவியும், பூமணி, அழகரத்தினம், அரசமணி ஆகியோரின் அன்புச் சகோதரியும், கிருஷ்ணகுமாரி, கிருஷ்ணவேணி, கிருஷ்ணமேனன், கமலவேணி, மதியழகன் ஆகியோரின் அன்புத் தாயாரும், இராசலிங்கம், சந்திரசேகர், டசீகரன், இந்துயா, டுசாந்தினி ஆகியோரின் அன்பு மாமியாரும், உசானாத், நிமல்நாத், ஆனோஜன், ஆருஜன், தனுஸ், நிஷாரா, அபிஷா, துஷாத், துவாரகன், அருணாஸ், ரிக், லூகா ஆகியோரின் அன்புப் பேர்த்தியும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் நாளை (28.09.2023) வியாழக்கிழமை அவரது இல்லத்தில் நடைபெற்று, பூதவுடல் தகனக்கிரியைக்காக குட்டியபுலம் பிள்ளையான் காடு இந்து மயானத்திற்கு எடுத்துச்செல்லப்படும். இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

[illegible],
[illegible]வளை.

தகவல்:
குடும்பத்தினர்

(cs 52285) (N-1)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# வரலாறு எங்கள் வழிகாட்டி

ஓர் இனத்தின் உரிமைப் போராட்டம் உயிர்ப்புடன் இருக்க வேண்டுமானால், அந்த இனத்தின் உரிமைக்கான வேட்கையும், ஓர்மமும், தியாகமும் ஒரு தலைமுறைக்குள் மாத்திரம் முடங்கியிருக்காமல், அடுத்தடுத்த சந்ததிக்கும் சரியான முறையில் கடத்தப்பட வேண்டும். இனத்தின் கடந்தகாலம் சரியான முறையில் இளைய சந்ததிக்கு புகுத்தப்பட்டு, வழிப்படுத்தப்பட வேண்டும். ஓர் அஞ்சலோட்டம் போல அவை இடையறாத் தொடர்ச்சியைக் கொண்டிருக்கவேண்டும். அதுவே ஓர் இனத்தின் விடுதலைக்குத் தேவையான தலையாய பணி. இலங்கைத் தீவில் அடக்குமுறைக்குள்ளான தமிழ் இனம், தன் உரிமைகளுக்காகப் பல தசாப்தங்களாகப் போராடுகின்றது. அகிம்சை வழியில் தங்கள் நியாயமான கோரிக்கைகளை முன்வைத்த தமிழர்கள் மீது அரச அடக்குமுறை பாய, தமிழ் மக்கள் வேறு வழியின்றி ஆயுதப்போராட்டத்துக்குள் தள்ளப்பட்டனர். மூன்று தசாப்தங்களுக்கு மேலாக தமிழ் மக்கள் நடத்திய ஆயுதப் போராட்டம், தமிழ் மக்களுக்கு அரணானது. தமிழ் மக்களின் நியாயமான போராட்டம் பயங்கரவாத முத்திரை குத்தப்பட்டு சர்வதேச நாடுகளின் கூட்டுச்சதிமூலம் மௌனிக்கப்பட்டது.

தமிழ் மக்களின் ஆயுதப் போராட்டம் முடிவுக்குக் கொண்டுவரப்பட்ட பின்னர் இலங்கையில் மீண்டும் தமிழ் மக்களுக்கு எதிரான நடவடிக்கைகள் வெவ்வேறு வடிவங்களில், வெவ்வேறு தளங்களில் வலுப்பெற ஆரம்பித்திருக்கின்றன. தமிழர் தாயகத்தில் திட்டமிட்ட பௌத்த மயமாக்கலும், அத்துமீறிய சிங்களக் குடியேற்றங்களும் கட்டவிழ்த்து விடப்பட்டிருக்கின்றன. தமிழ் மக்கள் தங்கள் சொந்தங்களை நினைவேந்தும் அடிப்படை உரிமைகூட மறுக்கப்பட்டு வருகின்றது.

பௌத்த மேலாதிக்க சிந்தனை தலைவிரித்தாடும் இந்தத் தீவில் தமிழ் மக்கள் தங்கள் இருப்பைத் தக்கவைத்துக் கொள்ள, ஆயுதப்போராட்டம் மௌனிக்கப்பட்ட பின்னரும் கூட, ஏதோ ஒருவகையில் எல்லாவற்றுக்காகவும் போராட வேண்டிய நிலைமையிலேயே தற்போதும் இருக்கின்றனர். தமிழ் மக்களின் உரிமைப் போராட்டம் நீர்த்துப்போகாதிருப்பதற்கு, இன்னமும் வீரியம் பெறுவதற்கு எம் கடந்த கால வரலாறு எதிர்காலச் சந்ததிக்குச் சரியான முறையில் கடத்தப்படுவது அவசியமாகும். அடக்குமுறைகளின் மத்தியிலும் தமிழர்தாயகம்எங்கும்முன்னெடுக்கப்படும்நினைவேந்தல்கள் எம் அடுத்த சந்ததிக்குச் செய்திகளைச் சொல்லுகின்றபோதும், அவை போதுமானவையாக இல்லை. ஒரு குறிப்பிட்ட இடத்தில், குறிப்பிட்டதொரு தினத்தில் குழுமி நிற்பதுவும், தீபங்களை ஏற்றி அஞ்சலிப்பதும், பின்னர் கலைவதும் அந்தக் கணத்தில் மட்டும் போராட்டத்தின் ஆன்மாவை உயிர்பெற வைக்குமே தவிர, அதற்கு சாகாவரம் கொடுக்கப்போவதில்லை. எனவே போராட்டத்தின் ஆன்மாவுக்கு நித்திய ஆயுள் கொடுக்கும் வகையிலான நடவடிக்கைகள் இப்போது நம்மிடையே அவசியம்.


தியாக தீபம் திலீபனின் நினைவேந்தல்கள் தாயகம் எங்கும், புலம்பெயர் தேசங்கள் எங்கும் உணர்வெழுச்சியுடன் முன்னெடுக்கப்பட்டிருக்கும் நிலையில், நல்லூரில் அமைக்கப்பட்ட தியாகதீபம் திலீபனின் வரலாற்றை எடுத்தியம்பும் ஆவணக் காப்பகம் முக்கியமான இடத்தைப் பெற்றிருக்கின்றது. அந்த ஆவணக் காப்பகத்துக்கு மக்கள் குடும்பமாக தங்கள் குழந்தைகளுடன் வந்து திரளாகப் பார்வையிட்டதைக் காணமுடிந்தது. இந்தக் குழந்தைகளுக்கு இப்போதிலிருந்தே எமது போராட்டத்தின் ஆன்மா ஊட்டப்படுவதனூடாக எமது எதிர்கால சந்ததியும், சரியான திசையில் உரிமைக்கான பயணத்தைத் தொடரமுடியும்.அந்தப்பணியை தியாகதீபம் திலீபன் ஆவணக்காப்பகம் மிகச் சரியாகச் செய்துள்ளது. மேலோட்டமான தகவல்களை மட்டும் காட்சிப்படுத்தாமல், ஆழமான தேடலும், மினக்கெடலும் , சீரான ஒழுங்கமைப்பும் இந்த ஆவணக்காப்பகத்தில் பளிச்சிட்டன. பன்னிரு நாள்களும் தற்காலிகக் கூடாரத்தில் அமைக்கப்பட்ட இந்த ஆவணக்காப்பகம் நிரந்தரமாக அமைக்கப்பட்டால் இன்னும் அதன் உச்சப் பயனை அறுவடை செய்யமுடியும்.

இனிவரும் காலங்களில் வெறுமனே நினைவேந்தல்களுடனும், அஞ்சலி நிகழ்வுகளுடனும் நின்று விடாது, வரலாற்றை எதிர்காலச் சந்ததிக்குக் கடத்தும் இவ்வாறான காட்சியகங்களை அமைக்கவும் முயலவேண்டும். அப்போதுதான் எதிர்காலச் சந்ததியினருக்கு தமிழ் மக்களின் கடந்த காலத்தையும், போராட்டத்தின் ஆன்மாவையும், உரிமைக்கான வேட்கையையும் இலகுவாகக் கடத்த முடியும். இல்லையேல், 'திலீபன் என்றால் யார்?'என்று கேட்கும் நிலை அடுத்த சந்ததியிடையே உருவாகும் அபாயமுண்டு. வரலாறுதான் எங்கள் வழிகாட்டி. அந்த வரலாற்றைத் துண்டாட இடமளியாது அதன் நீட்சியை, இருப்பை தக்கவைப்போம்.

## நாளொரு நல்வார்த்தை

மனிதர்களை மதிப்பிட்டுக்கொண்டே இருந்தால், அவர்களை நேசிக்க உங்களுக்கு நேரமிருக்காது

- அன்னை தெரேசா



# போர்க்குற்றங்களை மறுக்கிறார் மைத்திரி!



**கொழும்பு, செப்.27**

**உயிர்த்த ஞாயிறுத் தாக்குதல் சம்பவம் தொடர்பில் சர்வதேச விசாரணையை நிராகரித்ததன்மூலம், இறுதிப் போரின்போது போர்க்குற்றம் இடம்பெற்றுள்ளது என்பதை நேரடியாகவோ அல்லது மறைமுகமாகவோ நான் ஏற்றுக்கொள்ளவில்லை.**

- இவ்வாறு சிறிலங்கா சுதந்திரக் கட்சியின் தலைவரும், முன்னாள் ஜனாதிபதியுமான மைத்திரிபால சிறிசேன தெரிவித்தார்.

உயிர்த்த ஞாயிறுத் தாக்குதல் சம்பவம் தொடர்பில் சனல் - 4 வெளியிட்டிருந்த காணொலி இலங்கையில் பெரும் பரபரப்பை ஏற்படுத்தியது.

அது தொடர்பில் சர்வதேச விசாரணை நடத்தப்படவேண்டும் என மைத்திரி வலியுறுத்தினார். ஐ.நா.விடம் எழுத்துமூலம் இந்தக் கோரிக்கை விடுக்கப்படும் எனவும் அவர் குறிப்பிட்டிருந்தார்.

எனினும், இலங்கைக்கான ஐ.நா.வின் வதிவிடப் பிரதிநிதியை சந்தித்தபோது சர்வதேச விசாரணையை மைத்திரி கோரவில்லை. உள்ளக விசாரணைக்கு தொழில்நுட்ப ஒத்துழைப்பு போதும் எனக் குறிப்பிட்டிருந்தார்.

உயிர்த்த ஞாயிறுத் தாக்குதல் சம்பவம் தொடர்பில் சர்வதேச விசாரணை நடத்தப்பட்டால், 27 வருடகால போர் தொடர்பிலும் சர்வதேச விசாரணை கோரப்படலாம், அதன் மூலம் வேறு பிரச்சினைகள் உருவாகும் எனவும் மைத்திரி சுட்டிக்காட்டியிருந்தார்.

இந்த நிலையில், 'தற்போது சர்வதேச விசாரணையை நிராகரித்துள்ளீர்கள். அப்படியானால் இலங்கையில் போர்க்குற்றம் இடம் பெற்றுள்ளது என்பதை நீங்கள் ஏற்கின்றீர்கள்தானே.....என எழுப்பப்பட்ட கேள்விக்கு பதிலளிக்கையிலேயே மைத்திரி மேற்கண்டவாறு குறிப்பிட்டார். அவர் மேலும் தெரிவித்ததாவது:-

சனல் - 4 காணொலியை வெளியிட்ட பின்னர், ஐ.நா. மனித உரிமைகள் பேரவை விசாரணையைக் கோரியது. நானும் விசாரணையைக் கோரினேன்.

உயிர்த்த ஞாயிறுத் தாக்குதல் தொடர்பில் ஐ.நா. மனித உரிமைகள் பேரவை விசாரணையை நடத்தினால், போர் தொடர்பிலும் புலம்பெயரிகளும் விசாரணையைக் கோரலாம். அதற்குப் பேரவை அனுமதிவழங்கும். அதன்மூலம் தேவையற்ற பிரச்சினை ஏற்படக்கூடும். அதைக்கருதியே உள்ளக விசாரணை போதும் - என்றார். (எ-44)

# இலங்கையில் நில அதிர்வு!

கொழும்பு, செப்.27

மொனராக்லை மாவட்டத்துக்குட்பட்ட புத்தல மற்றும் அதனைச் சூழ உள்ள சில பகுதிகளில் சிறு அளவிலான நில நடுக்கம் உணரப்பட்டுள்ளது.

நேற்றுமுன்தினம் இரவு 11.20 மணியளவில் 2.4 ரிக்டர் அளவில் இந்த நில அதிர்வு பதிவாகியுள்ளது என்று புவிச் சரிதவியல் அளவை மற்றும் சுரங்கப் பணியகம் தெரிவித்துள்ளது.

நான்கு இடங்களில் பொருத்தப்பட்டுள்ள கருவிகளில் நில நடுக்கம் பதிவாகியுள்ளது. இந்த நில நடுக்கத்தால் எவ்வித சேதமும் ஏற்படவில்லை. (எ-44)

**நாளை** 28.09.2023 வியாழக்கிழமை புரட்டாதி 11

சுபநேரம் : 01.32 - 03.02

ராகுகாலம் : 07.32 - 09.02

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# திலீபன் நினைவில் தாயகம் நனைந்தபோது...





நல்லூர்















Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

PEOPLE'S BANK

## தங்கநகை ஏலவிற்பனை அறிவித்தல்

மக்கள் வங்கியின் பின்வரும் கிளைகளிலும்
சேவை நிலையங்களிலும் **30.06.2022 வரையும்**
**அடகு வைத்து மீட்கப்படாத நகைகள் - 13.10.2023**
**(வெள்ளிக்கிழமை), 14.10.2023 (சனிக்கிழமை)**
**திகதியில் காலை 8.30 மணிக்கு மக்கள் வங்கி, யாழ்.**
**ஸ்ரான்லி வீதிக்கிளையில் வைத்து பகிரங்க**
**ஏலத்தில் விற்கப்படும்.**

யாழ். ஸ்ரான்லி வீதி, மானிப்பாய், கொக்குவில் (நாவலர் வீதி), தெல்லிப்பளை, மல்லாகம், காங்கேசன்துறை, யாழ். பிரதான வீதி, உரும்பிராய், ஊர்காவற்றுறை, நெல்லியடி, அச்சுவேலி, புத்தூர், சங்கானை, பண்டத்தரிப்பு, சுன்னாகம், கோப்பாய், அளவெட்டி, சாவகச்சேரி, கைதடி, வல்வெட்டித்துறை, உடுப்பிட்டி, யாழ். பல்கலைக்கழகம், திருநெல்வேலி, கல்வியங்காடு, யாழ். கன்னாதிட்டி, இணுவில், பருத்தித்துறை, புலோலி, கொடிகாமம்

| | | |
|---|---|---|
| நகை மீளெடுப்பதற்கான இறுதி திகதி | : | 12.10.2023 |
| ஏலவிற்பனை நடைபெறும் இடம் | : | யாழ். ஸ்ரான்லி வீதிக் கிளை |
| திகதி | : | 13.10.2023 (வெள்ளிக்கிழமை) |
| | | 14.10.2023 (சனிக்கிழமை) |

அறிவித்தலின்றி திகதியை ஒத்திபோடுவதற்கும் ஏலம் விடப்படும் இடத்தினை மாற்றுவதற்கும் உரிமை வங்கிக்கு உள்ளது.

பிராந்திய முகாமையாளர்,
பிராந்திய தலைமையகம்,
கன்னாதிட்டி வீதி,
யாழ்ப்பாணம்.

தொ.பே.இல. : 021-222 2601
தொலை நகல் : 021-222 2602
மின்னஞ்சல் : jafrho@peoplesbank.lk

(cr.40638) (N-1)





Melanka

MEGA Sale பாதணிகள் பைகள்

இலங்கையின் மிகப்பெரிய காலணி கண்காட்சி

செப்டம்பர் 25 முதல் அக்டோபர் 10 வரை

**பாதணிகள்**

உள்ளூர் மற்றும் இறக்குமதி செய்யப்பட்ட பாதணிகள்
பெண்கள் காலணிகள்
ஆண்கள் காலணிகள்
குழந்தைகள் காலணிகள்
பள்ளிக்கூட காலணிகள்

**பைகள்**

பெண்களுக்கான கை பைகள்
பள்ளிக்கூட பைகள்

இலங்கையில் மிக குறைந்த விலையில்

யாழ்ப்பாணம்
வீரசிங்கம் மண்டபம்

076 148 7062







# உரும்பிராய் கருணாகரப் பிள்ளையார் கோயில் தேர்த்திருவிழா



## விஞ்ஞாபனம் - 28.09.2023

உமையவள்தன் பாலகனார் தேரிலேறி
உரும்பைநகர் வீதிவாரார் பாரும்பாரும்
பரத்தைப்புலக் கருணாகரன் தேரிலேறி
சிக்கலெல்லாம் சீக்கிரமாய் தீரச் செய்து
செல்வமொடு செல்வாக்கு மருளுவாய்
கலையாள்மிளிர் உரும்பைநகர் கருணாகரக் கணபதியே

சரித்திரப் பிரசித்தி பெற்ற உரும்பிராய் கருணாகரப்பிள்ளையார் கோயிலின்
இவ்வாண்டுக்கான மஹோற்சவ வரிசையில்
**நாளை (28.09.2023) வியாழக்கிழமை** எல்லாம் வல்ல
**கருணாகரப்பிள்ளையாரின் தேர்த்திருவிழா**
வெகு சிறப்பாக இடம்பெறவுள்ளது

அதிகாலை 5.00 மணிக்கு அபிஷேகத்துடன் ஆரம்பமாகி அதனைத் தொடர்ந்து காலை 08.00 மணிக்கு நடைபெறும் வசந்த மண்டபப் பூசையை அடுத்து எம் பெருமான் சித்திரத்தேரில் எழுந்தருளி வீதியுலா வந்து அடியார்களுக்கு நல்லருள் பாலிக்கவுள்ளார். நாளைய தேர் உற்சவத்தில் ஈழத்துப் புகழ் பூத்த பல தவில் நாதஸ்வரக் கலைஞர்கள் கலந்துகொண்டு எம் பெருமானுக்கு இசை ஆராதனை செய்வார்கள் கருணாகரப் பெருமானின் அடியவர்கள் தேர் உற்சவத்தில் சுகாதார நடை முறைகளைப் பின்பற்றி கலந்துகொண்டு எம்பெருமானின் திருவருட் கடாட்சம் பெற்றுய்யும் வண்ணம் வேண்டிக்கொள்கின்றோம்.

**தேர்த்திருவிழா உபயகாரர்கள்.**

(cr.38023) (2.6)


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# புதன் பொய்கை



"தக்கார் தகவிலர் என்பது அவரவர்
எச்சத்தாற் காணப்ப படும்." - வள்ளுவர்



## பாரம்பரிய கலைகளில் மக்களை கவர்ந்த

# தம்பாட்டி கிராமத்தின் காத்தவராயன் கூத்து!

நாட்டுப்புற மக்களின் தொன்று தொட்டு வருகின்ற பழக்கவழக்கங்கள், பண்பாடுகள், நம்பிக்கைகள் மற்றும் இலக்கியங்கள் ஆராயும் இயலே நாட்டுப்புறவியல் மற்றும் நாட்டார் வழக்காற்றியல் என்றும் வழங்கப் பெறுகின்றன. நாட்டார் வழக்காறுகளை பொதுவாக வாய்மொழி வழக்காறுகள், வாய்மொழி சாரா வழக்காறுகள் என இரு வகைப்படுத்தலாம். வாய்மொழி சார் விடயத்தில் நாட்டார் பாடல், வாய்மொழிக்கதைகள் போன்றனவும் வாய்மொழி சாரா நாட்டார் வழக்காறுகளினுள் நாட்டார் தெய்வம், நிகழ்த்து கலைகள், நாட்டார் விளையாட்டுகள், நாட்டார் உணவுகள் போன்றவையும் உள்ளடங்குகின்றன.

ஈழத்தமிழ் மக்களுடைய தேசியக் கலைவடிவமாகத் திகழ்வது நாட்டுக்கூத்தாகும். நீண்டகாலமாக இம்மண்ணின் அணிகலமாகத் திகழ்ந்துவரும் இந்தக் கூத்து வடிவம் சிறிதுகாலம் புறக்கணிக்கப்பட்டமை குறிப்பிடத்தக்கதாகும். இதற்கு ஆங்கிலக் கல்வியின் வருகையையும் திரைப்படங்களின் பாதிப்பையும் காரணங்களாகக் குறிப்பிடலாம். 1960 காலப்பகுதியில் கூத்துக்கலை மீண்டும் மறுமலர்ச்சி பெறுவதற்கு பேராசிரியர் சு.வித்தியானந்தனின் பணி அளப்பரியதாக அமைந்ததென்பது குறிப்பிடத்தக்கதாகும். ஈழத்தமிழருக்குரிய தனித்துவமான கூத்துவடிவங்களில் கதைவழிக் கூத்துகளில் ஒன்று தான் காத்தவராயன் கூத்து வடிவமாகும். பழைய கூத்து ஏடுகளில் 'கூத்தாகிய காத்தவராயன்' என்றே எழுதப்பட்டுள்ளது. இன்று கதைவழி எனும் பெயர் மறக்கப்பட்டு, சிந்துநடைக் கூத்து எனும் புதுப்பெயர் பெற்றுள்ளது. சிந்து நடை எனும் பெயர் இக்கூத்திற் பயிலப்படும் பாடலை மையமாகக் கொண்டெழுந்தது. 'சிந்திசையிற் பாடலிசைத்து சிங்காரமானதொரு நடை நடந்து நாங்கள் இக்கூத்தை நடத்துவோம்' எனக் காத்தவராயன் கூத்திலேயே இதற்கான அகச்சான்று காணப்படுகிறது.

### தம்பாட்டியில் காத்தவராயன் சிந்துநடைக் கூத்து அறிமுகம்

தம்பாட்டிக் கிராமத்தில் அதியரசன், பண்டார வன்னியன் போன்ற கூத்துகள் காணப்பட்ட போதிலும் காத்தவராயன் கூத்தினையும் சரிவரப் பழகி அதனை மேடையேற்ற வேண்டும் எனும் ஆர்வம் தம்பாட்டி கிராமவாசிகளிடம் காணப்பட்டது. இதற்கான முயற்சியாக இக் கிராம மக்களின் வேண்டுகோளிற்கிணங்க 1989ஆம் ஆண்டளவில் யாழ்ப்பாணம் நாகர் கோவிலடியைச் சேர்ந்த அண்ணாவியார் சுப்பையா என்பவரால் முதன்முதலாக தம்பாட்டி கிராமத்திற்கு இக் கூத்துக்கலை கொண்டுவரப்பட்டது. இக் கூத்து வடிவத்துக்கு மாலைக்கு வாதாடிய மைந்தன் கூத்து மற்றும் காத்தான் கூத்து என்றும் பெயர்கள் வழங்கப்பெறுகின்றன. அன்றைய காலப்பகுதியில் கிட்டத்தட்ட ஒரு வருடம் வரை இக்கூத்து பயிற்றுவிக்கப்பட்டு மேடையேற்றப்பட்டது. பின்னர் நாட்டில் போர்ச் சூழல் காரணமாக ஏற்பட்ட இடப்பெயர்வுகளால் மக்களிடையே தொடர்புகள் அற்றுப் போனதனால் இக்கூத்து இடைப்பட்ட காலப்பகுதியில் கைவிடப்பட்டது. பின்னர் புத்தூரைச் சேர்ந்த அண்ணாவியார் அன்பரசன் என்பவரால் மீண்டும் பயிற்றுவிக்கப்பட்டு மேடையேற்றப் பட்டது. அதனைத்தொடர்ந்து அவரின் சிஸ்யரும் தம்பாட்டி கிராமத்தைச் சேர்ந்த வேலுப்பிள்ளை தேவராசன் என்பவர் அண்ணாவியாராகப் பட்டம் சூட்டப்பட்டார். அன்றிலிருந்து இன்று வரை அவரும் தற்போது அவருடன் இணைந்து அவருடைய மகனான தேவராசன் ரஜிதரன் என்பவரும் இக்கூத்தினைப் பயிற்றுவித்து மேடையேற்றி வருகின்றனர்.

### கூத்தின் கதைக்கரு

தம்பாட்டிக்கிராமத்தில் நிகழ்த்தப்படும் காத்தவராயன் சிந்து நடைக் கூத்தின் உள்ளடக்கம் தெய்வங்களை மையப்படுத்தியதாக அமைந்துள்ளது. மாரி அம்மன் உமையின் இளைய சகோதரியாவார். மாரி திருமணம் ஆகாத கன்னித்தெய்வமாக அமைகின்றார். மாரிக்குக் குழந்தை கிடைக்கக்கூடாது எனச் சிவனும் திருமாலும் கரவாகச் சாபம் போடுகின்றனர். இதனை நாரதர் மூலம் அறிந்த மாரி, குழந்தை வரம் பெறுவதற்காகக் கடுந்தவமிருக்கின்றார். அப்போது சிவன் பெண் மானாகவும், திருமால் ஆண் மானாகவும் வடிவெடுத்து மாரியின் அருகே ஒரு மான் கன்றை ஈன, அது குழந்தை போல் அழ தவமிருந்தமாரி குழந்தை அழும் குரலைக்கேட்டு அதனைத் தூக்க, அது ஆண் குழந்தையாக மாறுகிறது. மாரி அக்குழந்தையை எடுத்து வளர்க்கிறார். கங்கை பெருக்கெடுத்து மாரியையும் குழந்தையையும் அழிக்க வந்தபோது குழந்தை தன் காலால் மறித்துத் தாயைக் காப்பாற்றியமையால், அக்குழந்தைக்குக் 'காத்தான்' 'காத்தவராயன்' என்ற பெயரை மாரி சூட்டுகின்றார். இந்த காத்தானின் பிள்ளைப்பருவம், பள்ளிப்பருவம், இளமைப் பருவம் என்பவற்றை அடிப்படையாகக் கொண்டு குறிப்பாக அவரது காதல் திருமணத்தை மையப்படுத்தியதாக இக் கூத்தின் கதைக்கரு அமைந்துள்ளது. இக் காத்தவராயன் கதையில் பரத்தைமை ஒழுக்கம், இழிவுபரத்தையர் நடத்தை என்பனவற்றுக்கு அதிக முக்கியத்துவம் கொடுக்கப்பட்டுள்ளது.

### கதாபாத்திரங்கள்

காத்தவராயன் சிந்துநடைக் கூத்தில் இடம்பெறும் கதாபாத்திரங்களாக காத்தவராயன், ஆரியப்பூமாலை, முத்துமாரி அம்மன், சிவன், பார்வதி, பூமாதேவி, வல்லத்து மாங்காளி, கறுப்பாச்சி அம்மன், கிருஷ்ணர், நாரதர், தொட்டியத்துச் சின்னான், வைசூரராசன், கோப்பிலிங்கி, சோமசுந்தரம், மல்லர், சம்பங்கித்தேவடியாள், வரவரச்சுருட்டி, டாப்பர் மாமா, செட்டியார், வண்ணாரநெல்லி பூமாது, வண்ணாரநெல்லி மகள் பூமாது, சாராயப் பூதி, செட்டிப்பெண், சப்தகன்னியர், சேடியர்கள், பறையன், கறுப்பி, மாடுமேய்க்கும் சிறுவர்கள், குடிமக்கள் மற்றும் சேவகன் போன்ற கதாபாத்திரங்கள் இடம்பெறுகின்றன. காத்தவராயன் சிந்துநடைக்கூத்தானது சடங்கு சார் சூழலிலும், சமூகம் சார் சூழலிலும்என இரண்டு நிலைகளிலும் நிகழ்த்தப்படுவதாக அமைகின்றது. கூத்தாடும் கலைஞர்கள் மிக்க பயபக்தியோடு கூத்தை ஆடுகின்றனர். அம்மனுக்குச் செய்யும் ஒருவகை வழிபாட்டு நெறி என்ற அடிப்படையிலேயே காத்தவராயன் கூத்து ஆடப்படுகின்றமை அக்கூத்தின் புனிதத் தன்மையை வெளிப்படுத்துகின்றது.

கூத்தானது ஒவ்வொரு வருடமும் சிவராத்திரி தினத்துக்கு இரவு வேளைகளில் தவறாது மேடையேற்றப்படுகிறது. அன்றைய தினத்தில் அனைவரும் கண் விழித்து இருப்பதற்கு துணை புரிவதாக இக்கூத்து முறைமை சடங்கு சார் வழக்காறாகப் பேணப்பட்டு வருகின்றது. காத்தவராயன் சிந்துநடைக் கூத்தில் ஆட்ட விகற்பங்கள் குறிப்பிடத்தக்கதாக இல்லை, எனினும் பாடப்படும் பாடல்களின் இசைக்கேற்றவாறான துள்ளல்நடையையே சகல கதாபாத்திரங்களும் பின்பற்றுவதைக் காணலாம். மேடையின் வலதுபக்கத்தாலும் இடது பக்கமாகவும் நேர்த்திசையாக நடிகர்கள் நகர்ந்து மீண்டும் மேடையின் நடுவேவந்து பாடுவர். பாடியபின்பு மீண்டும் நேர்த்திசையால் வலம்இடமாக துள்ளல் நடை அல்லது ஒய்யாரநடை ஆட்டத்துடன் கூத்துநிகழும். ஆனால் காத்தவராயன் நாடகத்தின் 'உயிர்' என்று கூறத்தக்கதாக அதன் இசை அமைப்புக் காணப்படுகின்றது. ஒவ்வொரு நிகழ்ச்சியிலும் வேறுவேறான இசை விகற்பங்களைப் பயன்படுத்துவதன் மூலமே பார்வையாளர்களைக் கவர்ந்துகொள்கின்றனர்..



மரியதாசன் பூவியர் லூட்ஸ் நிவேதிகா
இரண்டாம் வருடம்,
ஊடகக் கற்கைகள் துறை,
யாழ்ப்பாண பல்கலைக்கழகம்

### காப்புக் கட்டல்

கூத்து மேடையேற்றப்படுவதற்கு வாரத்துக்கு முன்னர் காப்புக் கட்டல் இடம்பெறுகிறது. காப்புக் கட்டல் என்பது தாம் கூத்து நிகழ்த்தப்படும் நேரத்தில் கூத்துக்கு எந்த இடையூறும் ஏற்படக்கூடாது என்பதற்காக அனைத்து தெய்வங்களையும் காவலுக்கு அழைப்பதாக இந்தக் காப்புக் கட்டல் இடம்பெறுகிறது. இது கூத்து ஆரம்பிப்பதற்கு முன்னர் 'ஒற்றைக் கொம்பன் திருமாரி காரும் எங்கள் உமையாள் பெற்ற பாலகனே. நாவில் குடியிருந்தே தாயே நல்லோசை தாவேனம்மா... தெரியாதோன் பாடுகிறேன் எங்கள் தேவி திருக்கதையை... அறியாதோன் பாடுகிறேன் எங்கள் ஆச்சி திருக்கதையை...' என்று காப்பு விருத்தம் பாடப்படுகின்றது. காப்புக் கட்டியதன் பின் அனைவரும் சுத்தபத்தமாக இருக்க வேண்டும், காப்புக் கட்டியதில் இருந்து மேடையேற்றும் வரை மாமிசம் உண்ணக்கூடாது, அத்தோடு திருமணமானவர்கள் தாம்பத்திய உறவில் ஈடுபடக்கூடாது என்ற ஐதீகமும், அதை மீறினால் தெய்வக்குற்றம் ஏற்படும் என்றும் மக்களிடையே நம்பிக்கைகள் காணப்படுகின்றன.

### கூத்து நிகழ்த்தும் கலைஞர்கள் பின்பற்ற வேண்டிய விடயங்கள்

மேடையில் கூத்து நிகழ்த்தும் கலைஞர்கள் தன்னிச்சையாக ஆடவோ, நடிக்கவோ முடியாது. ஏனெனில் மேடையில் தமது அசைவுகளை நடைமுறைகளை பின்பற்றியே மேற்கொள்ள முடியும். உடலின் பிற்பகுதி பார்வையாளர்களுக்கு காட்டப்படாதவாறு நடிக்கவேண்டும். அவ்வாறு பிற்பகுதி பார்வையாளர்களுக்கு தெரியும் வகையில் அமைந்தால் அது பார்வையாளர்களை அவமதிப்பதாக அமையும். மேடையில் ஒரு கதாபாத்திரம் பாடும் பாடல், மீண்டும் ஏனைய எல்லா கலைஞர்களாலும் பிற்பாட்டாகப் பாடப்படும். இது ஏனைய கலைஞர்களின் கவனத்தையும் கூத்துடன் இணைக்கும் ஒரு வழிமுறையாக அமைகிறது.

○ இதன் தொடர்ச்சி 11ஆம் பக்கத்தில் பார்க்கவும்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



# பாரம்பரிய கலைகளில் மக்களை கவர்ந்தது...

### உடைகள், ஒப்பனைகள்

நடிகர், நடிகையர்களது ஒப்பனைகளை நோக்கும் போது மெல்லிய பட்டு ஆடைகளையும், பாரமற்ற பூ முடி பூமாலைகள், காகித அட்டைகளாலான முடி முதலியனவற்றையுமே நடிகர்கள் பயன்படுத்துகின்றனர். முகத்தை வர்ணக்கலவைப் பூச்சுகளால் அவர்களுக்குரிய வேடமாக மாற்றிக் கொள்கின்றனர். காத்தவராயனுக்கும் தொட்டியத்துச் சின்னானுக்கும் தாறுபாய்ச்சிக் கட்டி அரசனுக்குரிய அலங்காரம் செய்வர். மாரியம்மனின் ஒப்பனை மரபு வழிப்பட்ட அலங்காரமுடையதாக அமைய, ஆரியப்பூமாலை, தோழிகள், தேவடியாள் முதலான ஏனைய பெண் பாத்திரம் ஏற்போர் நவீன முறைப்படி சேலைகட்டி அலங்கரித்துக் கொள்வர். ஆண் பாத்திரங்களும் கிராமிய நாடக மரபிற்கமைய அலங்காரம் செய்து கொள்வர்.

### பங்கேற்கும் கலைஞர்கள்

கூத்தை நிகழ்த்தும் நிகழ்த்து கலைஞர்களே அனைதுக்கும் முக்கியமானவர்களாக விளங்குகின்றனர். அந்த வகையில் இக் கிராம மக்களே கூத்தின் கலைஞர்களாக காணப்படுகின்றனர். கலைஞர்களின் பங்கேற்பு என்பது இயல்பானது, ஏனெனில் அவர்கள் தாமாகவே தமது திறமைகளை வெளிப்படுத்துவதற்கான ஒரு களமாக இதனைப் பார்ப்பதுடன், கூத்தின் மீது கொண்டுள்ள ஆர்வத்தினால் தாமாக முன்வருகின்ற தன்மையும் காணப்படுகின்றது.

தம்பாட்டி கிராம மக்கள் மாத்திரமே இக்கூத்தில் நிகழ்த்து கலைஞர்களாக இடம்பெறுகின்றனர். வேறு இடங்களில் உள்ள நிகழ்த்து கலைஞர்கள் தெரிவு செய்யப்படுவதில்லை, இவ்வூர் மக்களின் பண்பாடு, வாழ்க்கை முறை பழக்கவழக்கங்களை வேறு இடத்தில் இருந்து தெரிவு செய்யப்படும் ஒருவரால் புரிந்துகொள்முடியாது என்பதே இதற்கான பிரதான காரணமாகும். இக் கூத்தில் பங்கேற்கும் கலைஞர்கள் வருமானம் தரும் பிற தொழில்களில் ஈடுபடுவதுடன் கூத்தைப் பொறுத்தவரையில் இலாபநோக்கற்று பகுதி நேரக் கலைஞர்களாகவே வெறுமனே இக்கலைப் பாரம்பரியத்தை பாதுகாக்க வேண்டும் எனவும் இதனை அடுத்த தலைமுறைகளிற்கு கடத்த வேண்டும். பரவச்செய்ய வேண்டும் என்னும் எண்ணமுடையவர்களாகக் காணப்படுகின்றனர்.

இவ்வூரைச் சேர்ந்தவர்களில் தற்போது பார்வையாளர்களாக இருப்போர் முன்னைய காலங்களில் பங்கேற்பாளர்களாக இருந்தவர்களாக அமைகின்றனர். இவற்றோடு தனிப்பட்ட ரீதியான பங்களிப்பு எனும் தம்பாட்டிக் கிராமத்தில் வசிப்பவர்களின் பங்களிப்பும், அவர்களின் ஊரைச் சேர்ந்த புலம்பெயர் தேசங்களில் உறவுகளின் நிதிப் பங்களிப்பும் அளப்பரியதாகக் காணப்படுகிறது.

### பங்களிப்பாளர்கள்

கூத்தைப் பொறுத்தவரையில் கூத்தை பயிற்றுவித்து கலைஞர்களை நெறிப்படுத்தும் மிகப்பெரிய பொறுப்பு அண்ணாவியாரிடமே காணப்படுகின்றது. ஆரம்பத்தில் கூத்தில் பல கதாபாத்திரங்களை ஏற்று நடித்து, பாடும் நடிக்கும் திறன் பயிற்றுவிக்கும் திறன் என எல்லாவற்றிலும் திறமை கொண்டவராகவும் இவர் காணப்படுகிறார். இக்கூத்தைப் பயிற்றுவிப்பதற்கு குருதட்சணை என எதையும் எதிர்பார்க்காது சுயநலமற்றவராகவும் அர்ப்பணிப்புள்ளவராகவும் காணப்படுகிறார்.

கூத்தைக் கொண்டு நடத்துவது பக்கவாத்தியமும் பக்கவாத்தியகாரர்களும் ஆவர். அந்த வகையில் இங்கு கலைஞர்களே பக்கவாத்தியக்காரர்களாகவும் திகழ்கின்றமை குறிப்பிடத்தக்க விடயமாகும். ஆரம்ப காலத்தில் பக்கவாத்திய கலைஞர்கள் வெளி இடங்களில் இருந்து வரவழைக்கப்பட்டனர். ஆனால் இன்று கூத்துக் கலைஞர்களே பக்கவாத்தியங்களை சரிவரப் பயன்று இசைப்பவர்களாக காணப்படுகின்றனர்.

கூத்தில் இரசனைக்காக பிற்பாட்டுப் பாடப்படுவதோடு மேடையில் நடிக்கும் கலைஞர்களுக்கு துணை புரிபவர்களாக,, கூத்தை இரசனை மிக்கதாக நகர்த்திச் செல்வதும் இவர்களே. அந்த வகையில் இங்கு பிற்பாட்டுக்காரர்களாக கூத்தின் கலைஞர்களே காணப்படுகின்றனர்.

### கூத்து எதிர்நோக்கும் சவால்கள்

ஆரம்பத்தில் புகழ்பெற்றிருந்த காத்தவராயன் கூத்து இன்று பல சவால்களை எதிர்கொண்டே பயணப்படுகின்றது. ஆரம்ப காலங்களில் வாழ்ந்த கிராமமக்களுடன் ஒப்பிடுகையில் தற்போது கூத்து சார்ந்த ஆர்வமானது மக்களிடையே வெகுவாகக் குறைந்துள்ளது. முன்னைய காலங்களில் இளைஞர்களின் ஆதரவே அதிக அளவில் காணப்பட்ட போதிலும் இன்று இளைஞர்கள் கூத்தில் நாட்டமற்றவர்களாகவும் புதிய தொழில்நுட்பங்களின் பால் ஈர்க்கப்பட்டவர்களாகவும், இன்னும் பிற கேளிக்கைகளில் ஆர்வமுள்ளவர்களாகவும் காணப்படுகின்றனர்.

கூத்துக்கள் எனப்படுவதை பெரும் கலைகள். காலமாற்றத்தால் அவற்றின்பால் ஈர்க்கப்படுவோரின் எண்ணிக்கை வீழ்ந்துவருகின்ற நிலையில், நவீனங்களை மையப்படுத்தி அவை புதுப்பிக்கப்படும் பட்சத்தில் அவற்றின் ஆயுள் நிச்சயம் நீளும். இதற்குரிய அத்தனை சாத்தியப்பாடுகளையும் துறைசார் அதிகாரிகள் மேற்கொள்ள வேண்டும் என்பது தான் கூத்துலகின் இப்போதைய எதிர்பார்ப்புமாகும். ■



செல்வகுமார் ரினோஷன்
மூன்றாம் வருடம் இரண்டாம் அரையாண்டு
ஊடகக் கற்கைகள் துறை
யாழ்ப்பாணப் பல்கலைக்கழகம்





# காலநிலை மாற்றமும் கால்நடை வளர்ப்பும்

இலங்கை போன்ற வளர்ந்துவரும் நாடுகளில் வேளாண் உற்பத்தியில் கால்நடை வளர்ப்பு முக்கியமான அங்கமாகும். கால்நடைகளின் உற்பத்திகளான இறைச்சி, பால், முட்டை போன்றவற்றின் தேவை நாளுக்கு நாள் உலக அளவில் அதிகரிக்கும் அதேநேரம், இவற்றை வெளிநாடுகளில் இருந்து இலங்கைக்குள் இறக்குமதி செய்யும் அளவும், கேள்வியும் உள்நாட்டில் அதிகரித்துள்ளது. இன்றைய நாள்களில் கால்நடைத் துறையில் பருவநிலை மாற்றங்கள் தவிர்க்கமுடியாத அளவுக்குச் செல்வாக்குச் செலுத்துகின்றன. இது தொடர்பான ஒரு பார்வையே இந்தக் கட்டுரை. விவசாயிகள் சிலருடன் சந்திப்புகளை மேற்கொண்டு அவர்களின் அனுபவப் பகிர்வையும் அடிப்படையாகக் கொண்டு இந்தப் பதிவு அமைக்கப்பட்டிருக்கின்றது.

'உலக வெப்பநிலையானது 1.5 டிகிரி செல்சியஸ் அளவுக்கு உயரும் பட்சத்தில் தவிர்க்க முடியாத வேகத்தில் காலநிலை பேரிடர்கள் ஏற்படும். இது மனிதர்களிடத்திலும் விலங்குகளிடத்திலும் கடும் செல்வாக்கைச் செலுத்தும்' என்று காலநிலை தொடர்பான சர்வதேச ஐ.நா. ஆய்வில் குறிப்பிடப்பட்டுள்ளது. அத்துடன் எதிர்வரும் ஆண்டுகளில் 'எல் நினோ' தாக்கத்தால் கால்நடைகள் பெரும் பின்னடைவையும் துன்பத்தையும் எதிர் கொள்ளும் என்றும் ஐ.நா. எச்சரிக்கின்றது. ஆதலால், கால்நடை வளர்ப்போர் தங்கள் கால்நடைகளுக்காக காலநிலை மாற்றத்தையும் அதனால் ஏற்படும் விளைவுகள் பற்றியும் தெரிந்து கொள்வது மிகவும் அவசியமாகின்றது.

### நேரடித்தாக்கங்கள் என்ன?

காலநிலை மாற்றத்தால் ஏற்படும் நேரடி தாக்கமென்பது கால்நடைகளின் ஆரோக்கியத்தில் ஏற்படும் பிரச்சினைகளாகும். கால்நடைகள் வெப்ப அயர்ச்சிக்குட்பட்டு அவற்றின் பால், இறைச்சி, முட்டை போன்றவற்றின் உற்பத்தித் திறன் வெகுவாகக் குறைகின்றது. அத்தோடு இனப்பெருக்கத் தன்மை, கால்நடைகளின் உடல்நலம் போன்றவற்றில் பாதிப்புகளை ஏற்படுத்தி வருமானத்தைக் குறைப்பதால் கால்நடை வளர்ப்போர் பெரும் சிரமத்துக்கு ஆளாகின்றனர். காற்றின் வேகம், ஈரப்பதம், வெப்பநிலை போன்றன கால்நடைகளை நேரடியாகத் தாக்குவதால் அவற்றின் உற்பத்தியானது குறைகிறது. அத்தோடு புதியபுதிய தோல் நோய்கள் ஏற்பட்டு மருத்துவச் செலவையும் ஏற்படுத்தவே செய்கின்றது.

### மறைமுகத் தாக்கங்கள் எவை?

பருவநிலை மாற்றங்களால் கால்நடைகளில் ஏற்படும் மறைமுகத் தாக்கங்களாக, காலநிலை மாற்றத்தால் கால்நடைகளுக்குத் தேவையான தீவனம் மற்றும் நீரின் அளவு குறைகின்றது. அதாவது வறட்சியினால் மேய்ச்சல் நிலங்களில் புற்கள் குறைந்து தீவனப் பற்றாக்குறை ஏற்படுகின்றது. அத்துடன், வறட்சிக் காலத்தில் ஏற்படும் தண்ணீர் பற்றாக்குறையும் கனதியான செல்வாக்கை கால்நடைகளில் மறைமுகமாகச் செலுத்துகின்றது. காலநிலை மாற்றத்தில் வெப்பநிலை அதிகரிப்பே அதிக தாக்கம் செலுத்துகின்றது. அதன்படி வெப்ப அதிகரிப்பானது இனப்பெருக்கச் செயற்பாடுகளிலும் பெரிதும் ஆதிக்கம் செலுத்துகின்றது. வெப்ப அயர்ச்சியில் உள்ள பசுக்களில் வளர்ச்சி அடைந்த கருமுட்டைகள் தரம் குறைந்து சினைப்பருவ அறிகுறிகளை குறைக்கின்றன. எனவே கோடைக்காலங்களில் சினைப்பருவ அறிகுறிகள் கண்டறிவது சற்று சிரமமாக இருக்கும். அதிக வெப்பமான அல்லது குளிரான வானிலை மாற்றங்கள் கால்நடைகளின் நோய் எதிர்ப்பு சக்தியை குறைக்கின்றன. சடுதியான காலநிலை மாற்றங்களின்போது உண்ணிக்காய்ச்சல், ஆட்டு அம்மை, நீலநாக்கு நோய் உள்ளிட்ட பல நோய்கள் கால்நடைகளை இரக்கமின்றித் தாக்குகின்றன.

### திட்டங்கள் தேவை

காலநிலை மாற்றத்தின் விளைவை சமாளிப்பதற்குத் தேவையான முன்னெச்சரிக்கை நடவடிக்கை, காலநிலை மாற்றம் பற்றிய அறிவு என்பவற்றை பண்ணையாளர்கள் அறிந்து இனப்பெருக்கச் செயல்முறைகளை நடைமுறைப்படுத்த வேண்டும். மேலும் பருவ மாற்றத்தினால் ஏற்படும் தீவனப் பற்றாக்குறையைச் சீர்படுத்த தீவனம் அதிகமுள்ள காலகட்டத்தில் அதனைப் பாதுகாத்து பதப்படுத்தி உலர் தீவனமோ வைக்கோல் புல் தாயாரித்து வைப்பதன் மூலமோ தீவனப் பற்றாக்குறையைச் சமாளிக்கலாம்.

இலங்கை ஒரு விவசாய நாடு. காலநிலை மாற்றத்துக்கு எதிராகப் போட்டிபோட்டு இந்தத் துறையின் தன்னிறைவு காணவேண்டிய தேவை இலங்கைக்கு இருக்கின்றது. அதற்குரிய நல்ல திட்டங்களை நடைமுறைப்படுத்தினால் மட்டும்தான் இலங்கையின் எதிர்காலம் மிளிரும். தன்னிறைவு காணக்கூடிய துறைகளிலாவது இறக்குமதியை நம்பியிராமல் இருக்கலாமே. ■

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# கருமுட்டை உறைவு

## இயற்கை இயல்பு விதிகளை மாற்றியமைத்த விஞ்ஞானம்!



■ ச.தனுஷ்கா
யாழ்ப்பாண பல்கலைக்கழகம்,
ஊடகக் கற்கைகள் துறை

அபிவிருத்தியடைந்த நாடுகளில் இன்று பல தொழில்நுட்பங்கள் கண்டுபிடிக்கப்பட்டு. அவை மனிதர்களது வாழ்க்கையில் பல அபரிமிதமான மாற்றங்களை ஏற்படுத்தி வருகின்றன. விஞ்ஞானத்தின் வளர்ச்சியால் இன்று மனிதர்களது சிக்கல் மிகுந்த வாழ்க்கையானது, சுலபமாக்கப்படுகிறது. அவ்வாறு மானுடனின் வாழ்க்கையில் பெரும் சிக்கலாகக் காணப்படும் குழந்தையின்மை தொடர்பான பிரச்சினைக்குத் தீர்வாக உலக நாடுகளில் பரவலாகவும், வெற்றிகரமாகவும் செயற்படும் தொழில்நுட்பமாக 'கருமுட்டை உறைதல்' அமைகிறது.

கருமுட்டை உறைதல் அல்லது கருமுட்டை வங்கி என்பது செயற்கைக் கருத்தரிப்பு நுட்பத்தின் ஒரு செயற்பாடாகும். இதன்மூலம் பெண்களின் கருமுட்டைகளை உறைய வைத்து பின்னர் பயன்படுத்தலாம். இச்செயற்பாட்டின்போது முதிர்ந்த கருமுட்டைகள் கருப்பையிலிருந்து அகற்றப்பட்டு ஆய்வகத்துக்கு எடுத்துச் செல்லப்படுகின்றன. அங்கு கருமுட்டைகள் எதிர்கால பயன்பாட்டுக்கு ஏற்ற சரியான வெப்பநிலையில் உறைய வைக்கப்படுகின்றன. இவ்வாறு ஆய்வகத்தில் உறைய வைக்கப்படும் கருமுட்டைகளில் தேவைப்படும்பொழுது விந்தணுக்களை செலுத்தி அதன்பின்னர் கருவுற்ற முட்டையைப் பெண்ணின் கருப்பையில் செலுத்தலாம். பல்வேறு காரணங்களுக்காக குழந்தைப் பிறப்பை பிற்போடும் பெண்கள், தங்கள் கருவுறுதலைப் பாதுகாக்கவும் கட்டுப்படுத்தவும் இம்முறைமையைத் தேர்ந்தெடுக்கின்றனர். பெரும்பாலும் வயதாகும்போது பெண்களது கருமுட்டையின் தரம் குறைவடைய ஆரம்பிக்கின்றது. இந்தச்சூழலில் உறையவைத்த கருமுட்டைகளைப் பயன்படுத்தி கருவுறுதலில் வெற்றியைப் பெறலாம்.

குழந்தை பெறுதலை தள்ளிப்போட விரும்பும் பெண்களுக்கு கருமுட்டையை உறையச் செய்யும் தொழில்நுட்பம் ஒரு வரப்பிரசாதமாகும். மருத்துவத்துறையில் ஐ.வி.எப்புக்குப் பின்னர் கருமுட்டை உறைதல் என்பது ஒரு மிகப்பெரிய தொழில்நுட்ப முன்னேற்றமாகும். திருமணம் ஆகாத பெண்களும் இந்தத் தொழில்நுட்பம் மூலம் தங்களின் தரமான கருமுட்டைகளைப் பாதுகாத்து வைத்துக் கொள்கின்றார்கள். இன்றைய போட்டி உலகில் தொழிலில் எந்தத்தடையும் இன்றி தாம் தொடர்ச்சியாக தொழில்புரிய விரும்பும் பெண்கள், குடும்பச் சூழல் காரணமாக குழந்தை பெறுதலைத் தள்ளிப்போட விரும்பும் பெண்கள் கருமுட்டை உறைதல் செயல்முறைக்கு முன்னுரிமை அளிக்கிறார்கள்.

இன்று உலகளவில் பல பெண்கள் புற்றுநோயால் பாதிக்கப்படுகின்றனர். இவ்வாறு புற்றுநோய் சிகிச்சைக்கு உட்படுத்தப்படுகின்ற பெண்கள் கீமோதெரபி அல்லது ரேடியோதெரபி உள்ளிட்ட சில புற்றுநோய் சிகிச்சைகளை மேற்கொள்வர். இப்புற்றுநோய் சிகிச்சைகள் பெண்ணின் கருவுறுதலைப் பாதிக்கும். எனவே புற்றுநோய் சிகிச்சைக்கு முன் கருமுட்டை உறைதல் செயல்முறையைச் செய்து எதிர்காலத்தில் குழந்தைகளைப் பெறலாம். வயது சார்ந்த கருவுறாமை பிரச்சினையை பற்றிக் கவலையுறும் பெண்களுக்குக் கருமுட்டை உறைதல் ஒரு நல்ல தீர்வாக அமைகிறது. இச்செயன்முறைக்கு உகந்த வயதெல்லையாக 20 முதல் 30 வயது கூறப்படுகிறது. இந்த வயதில் ஒரு பெண்ணால் தரமான கருமுட்டைகளை உற்பத்தி செய்ய முடியும். மேலும் எப்போது தாய்மை அடைய வேண்டும் என்பதை இவ்வயதெல்லையில் தீர்மானிக்கமுடியும்.

குழந்தையின்மை பிரச்சினைக்கு வரப்பிரசாதமாக அமையும் இச்சிகிச்சை முறையானது சாதாரண மக்களுக்கு எட்டாத சிகிச்சை முறையாக உள்ளமையை மறுக்கமுடியாது. கருமுட்டை உற்றதல் பாதுகாப்பானதா என்ற ஐயம் மக்களிடம் எழுவதுண்டு. உறைந்த கருமுட்டைகள் மூலம் கருத்தரித்த முதல் குழந்தை 1986ஆம் ஆண்டு பிறந்தது. அதற்குப்பிறகு இரண்டாயிரத்துக்கும் மேற்பட்ட குழந்தைகள் இந்தச் செயல்முறையின் மூலம் உலகுக்கு வந்துள்ளன. உறைந்த கருமுட்டைகள் மூலம் கருத்தரித்த குழந்தைகளில் பிறவிக் குறைபாடுகளின் விகிதத்தில் வெளிப்படையான அதிகரிப்பு இது வரை காணப்படவில்லை. குழந்தைகளைப் பெறத் தயாராக இருக்கும்போது தரமான கருமுட்டைகள் கிடைக்கக்கூடிய வாய்ப்பை இந்தக் கருமுட்டை உறைதல் செயல்முறை அளிக்கின்றது. மேலும் வயதாகும்போது கருமுட்டையின் தரம் குறையத்தொடங்குகின்றது. இந்தச்சூழலில் உறைய வைத்த கருமுட்டைகளை பயன்படுத்தி கருவுறுதலில் வெற்றியைப் பெறலாம்.

### கருமுட்டை உறைதலின் பாதகத்தன்மை என்ன?

இன்றைய நவீன தொழில்நுட்பத்தின் வளர்ச்சியால் இவ்வுலகில் மனிதர்களின் கற்பனைக்கு எட்டாத விடயங்கள் கூட மெய்ப்பிக்கப்பட்டுள்ளன. இதனை இன்றைய தலைமுறையில் வாழும் ஒவ்வொருத்தரும் ஏற்றுக்கொள்கின்றனர். அவ்வாறான ஒரு தொழில்நுட்பத்தின் ஒரு உத்தியே இக்கருமுட்டை உறைதல் ஆகும். இது சாதகமான பல அம்சங்களை கொண்டிருந்தாலும் சில தீமைகள் இப்படிமுறைகளில் இருக்கத்தான் செய்கின்றன. பொதுவாக் கருமுட்டை உறைதலுக்காக செய்யப்படும் அறுவைச் சிகிச்சைகள் பாதுகாப்பானதாக கருதப்படுகிறது. ஆனால் இந்தச் செயல்முறையின்போது செலுத்தப்படும் ஹார்மோன் ஊசிகள் கருப்பை ஹைப்பர் ஸ்டிமுலெஷன் சின்ரோம் (முர்ளு) இன் அபாயத்தை அதிகரிக்கின்றது. இது பெண்களுக்கு எதிர்காலத்தில் சில நோய்களை உண்டாக்கலாம். இதன் பக்க விளைவுகளாக பெண்களுக்கு வாந்தி, வயிற்றுவலி அல்லது தலைசுற்றல் போன்ற பிரச்சினைகள் தொடங்குகின்றன. பல சமயங்களில் அவ்வாறு உறைய வைத்து பயன்பாட்டுக்காக வெளியே எடுக்கப்படும் கருமுட்டைகள் செயற்பாட்டின்போது வாழாது இறந்து விடக்கூடும். இது குழந்தை பெறுவதற்கான வாய்ப்புக்களை குறைக்கிறது. தங்கள் கருமுட்டைகளை உறைய வைக்கும் பெண்களுக்கு கருமுட்டை மூலம் கருவுறுதலுக்கான சாத்தியங்கள் பல வருடங்கள் வரை தெரிவதில்லை. இந்தச் சூழலில் இயற்கையான முறையில் குழந்தை பெறுவதற்கான வாய்ப்பையும் இழக்க நேரிடும்.

மனித உடலில் காணப்படும் உயிரியல் கடிகாரத்தின் செயற்பாட்டினை இக் கருமுட்டை உறைதல் தொழில்நுட்பம் மாற்றியமைக்கிறது. தாய்மை எனும் புனிதமான நிலையை அடைவதே ஒரு பெண்ணின் ஆத்மார்த்தமான மகழ்ச்சியாகும். அதற்குத் தடையாக அமையும் காரணிகளை இன்றைய நவீன தொழில்நுட்பத்தின் உதவியுடன் இலகுவாக கடந்து செல்லமுடிகிறது. இயற்கை என எண்ணியதனைத்தும் இன்று நவீன தொழில்நுட்பத்தினூடாக மாற்றியமைக்கப்படுகிறது. ■

---

# இலங்கையின் இலவசக் கல்வியும் சமூக மாற்றமும்



■ சயந்தன் அபிசரண்
ஊடகக் கற்கைகள் துறை
இரண்டாம் வருடம்
யாழ். பல்கலைக்கழகம்

கல்வியின் முக்கியத்துவம் பற்றி அறியாதவர்கள் இந்த அகிலத்திலே அரிது என்றே கூறலாம். உலக நாடுகள் அனைத்துமே கல்வி என்கின்ற மாபெரும் துறைக்கு பிரதானமான பங்களிப்பை அன்று தொடக்கம் இன்று வரை வழங்கிக் கொண்டுதான் இருக்கின்றன. கல்வி என்ற சொல்லுக்கு பலராலும் பல அர்த்தங்கள் முன்வைக்கப்படுகின்றன. அந்த அர்த்தங்களின் அடிப்படையில் நோக்குகின்றபோது, ஒருவர் இந்த உலகில் பெறுகின்ற அறிவு, ஆற்றல் அனுபவம் என்பவற்றின் தொகுப்பே கல்வியென சுருக்கமாகக் கூறமுடியும். ஒருவர் பெறுகின்ற கல்வி அவரது ஆளுமைக்கும் ஆற்றலுக்கும் திறனுக்கும் அடித்தளமாக இருந்து அவரது ஒவ்வொரு செயற்பாட்டையும் சிறப்புற மேற்கொள்ள வழி வகுக்கும். நவீன யுகத்தில் கல்விக்கான அனைத்து வாய்ப்பு வசதிகள் மற்றும் சந்தர்ப்பங்கள் திறந்தே விடப்பட்டிருக்கின்றன. எனவேதான் அனைவருக்கும் கல்வி என்ற கோட்பாடு 'மனித இனம் முழுவதற்கும் கல்வி வழங்குதல்' என்பதைக் குறித்து நிற்கின்றது. இந்த அறிவியல் யுகத்தில் நாமும் இணைந்து கொள்ளவேண்டுமானால், மேலும் அதன் சவால்களுக்கு ஈடுகொடுக்க வேண்டுமானால் கல்வி அறிவு பெற்றிருப்பது அவசியமாகும்.



### இலவசக்கல்வியின் மேம்பாடு

இலவசக் கல்வியைப் பெற்றுக் கொடுக்கின்ற பல நாடுகள் இன்று காணப்படுகின்றன. அதில் இலங்கையும் ஒரு முக்கியமான நாடாகக் காணப்படுகின்றது. இலங்கையில் பிறக்கும் பிள்ளை பாடசாலையில் முதலாம் தரம் தொடக்கம் பல்கலைக்கழகத்தில் பட்டம் பெறும் வரை இலவசமாகப் படிக்கலாம். ஆனால் இன்றைக்கு மாணவர்கள் இந்த இலவசக் கல்வியின் தார்பரியத்தை உணர்கிறார்களா? என்றால் அது கேள்விக்குறியே. இலங்கையில் இலவசக் கல்வியானது சி.டபிள்யூ.டபிள்யூ. கன்னங்கராவினால் ஏற்படுத்தப்பட்டதோடு இவர் இலவசக் கல்வியின் தந்தை எனவும் அழைக்கப்படுகின்றார். அத்தோடு மத்திய மகா வித்தியாலயங்கள் அவரினாலேயே உருவாக்கப்பட்டன. அவரால் அறிமுகப்படுத்தப்பட்ட இலவசக் கல்வி வாய்ப்பின் மூலமே இலங்கை மக்கள் எழுத்தறிவு மிக்கவர்களாக உள்ளனர். தென்கிழக்காசிய நாடுகளின் சனத்தொகையில் 98.1 வீதம் எழுத்தறிவு கொண்ட மக்களைக் கொண்ட நாடாக இலங்கை திகழ்கின்றது. அதற்குக் காரணம் அர்ப்பணிப்புள்ள ஆசிரியர்களின் கடமை உணர்வும், கற்பித்தல் உணர்வும் இந்த நிலையை அடையச் செய்திருக்கின்றது.

### இலவசக் கல்வியின் இன்றைய நிலை

அனைத்தும் இலவசமாகக் கிடைப்பதால் கல்வியின் தார்பரியத்தை இன்று பலரும் உணர மறுக்கின்றனர். மேலதிக வகுப்பு அல்லது டியூஷன் வகுப்புகள் அல்லது கல்வி முகாம்கள் என்ற பெயர்களில் பணம் தேடலுக்கான வியாபார முறையாகக் கல்வி மாற்றப்பட்டுக் கொண்டிருக்கின்றது. அதீத தொழில்நுட்ப வளர்ச்சி காரணமாக இன்றைக்கு இலவச கல்வி முறைமை மறைக்கப்பட்டுள்ளது நிகழ்நிலையில் கற்றல் செயற்பாடுகள் கற்பிக்கப்படுவதால் பணம் கொடுத்து கல்விச் சமூகமொன்று விரைவாக உருவாகி வருகின்றது. உண்மையில், இலவசக் கல்வியை வழங்குகின்ற நாடுகளில் எம்நாடும் காணப்படுவது பெருமைக்குரிய விடயமே.

பாடசாலை முதல் பல்கலைக்கழகம் வரை எமக்குக் கிடைக்கப் பெறுகின்ற இந்த இலவசக் கல்வியை நல்ல முறையில் பயன்படுத்தி அதன் மூலமாக எமது சமூகங்களிலேயே சாதகமான விடயங்களை மட்டுமே உருவாக்கி கற்ற. அறிவுடைய எதிர்கால சமுதாயத்தைக் கட்டி எழுப்புவதோடு, இனி வருகின்ற இளம் சமூகத்தினரிடம் சிறுவயதிலிருந்தே இந்த இலவசக் கல்வியின் மகத்துவத்தை அவர்களுக்குப் புரியவைத்து ஒழுக்கமுள்ள சமூகத்தை உருவாக்கி நல்லதொரு சமூக மாற்றத்தைக் கொண்டு வர முயற்சிக்கவேண்டியது இன்று காலத் தேவையாகவும் உள்ளது. ■

Digitized by Noolaham Foundation
noolaham.org | aavanaham.org

(சங்க காலத்தில் வணிக நடைமுறைகள் எவ்வாறிருந்தன. அக்காலத்தில் தமிழர்கள் எவ்வாறான வணிகக் கலாசாரத்தைப் பின்பற்றினார்கள் என்பன தொடர்பில் இந்தக் கட்டுரை விரிவாக ஆராய்ந்து எண்பிக்கின்றது. கடந்த வாரத்தின் தொடர்ச்சி இவ்வாரம் பதிவாகின்றது)



பேராசிரியர்
சிவனேசன் சிவானந்த மூர்த்தி
சந்தைப்படுத்தல் துறை
யாழ்ப்பாணப் பல்கலைக்கழகம்

# சங்க இலக்கியங்களில் வணிகமும் வணிக நடைமுறைகளும்

பண்டைத் தமிழர்களின் வரலாற்றினைக் கட்டி எழுப்பதில் சங்க இலக்கியங்களே அடிப்படையாக இருந்தன சங்கத்துக்கு 'கூடல்', 'சபை' எனவும் பொருள் கொள்ளலாம். தமிழ் ஆய்ந்த வல்லுனர்கள், அறிஞர்கள் பலர் கூடி ஆய்வு ரீதியாக முடிவினை எடுக்கும் இடத்தினைக் கூடல் என்று அழைப்பார். ஆதலால் தான் மாணிக்கவாசகப் பெருமான் 'கூடலின் ஆய்ந்த ஒண் தீந்தமிழ்' என்கிறார்.

சங்க காலத்தினை வரையறை செய்வது சற்றுக் கடினம் என்றாலும் சங்க இலக்கியங்கள் என்பதற்குள் எட்டுத்தொகை நற்றிணை, குறுந்தொகை, ஐங்குறுநூறு, அகநானூறு, கலித்தொகை, பதிற்றுப்பத்து, புறநானூறு, பரிபாடல் மற்றம் பத்துப்பாட்டு திருமுருகாற்றுப்படை, பொருநர் ஆற்றுப்படை, சிறுபாண் ஆற்றுப்படை, பெரும்பாண் ஆற்றுப்படை, முல்லைப்பாட்டு, மதுரைக்காஞ்சி, நெடுநல்வாடை, குறிஞ்சிப்பாட்டு, பட்டினப்பாலை, மலைபடுகடாம் உள்ளடக்கப்படுகின்றது. சங்க இலக்கியங்கள் ஈழத்துப் பூதன் தேவனார் உட்பட 473 புலவர்களால் பாடப் பெற்ற மொத்தம் 26 ஆயிரத்து 350 வரிகளைக் கொண்ட ஆகமொத்தம் 2 ஆயிரத்து 381 பாடல்களினை உள்ளடக்கியவாறாய். 18 நூல்களுக்குள் உள்வாங்கப்பட்டிருக்கின்றன. சங்க இலக்கியங்கள் மதச் சார்பற்றவை. ஆனால் சங்ககாலத்து நூல்களில் திருமுருகாற்றுப்படை, பரிபாடல் போன்றவை இறை இருப்புத்தன்மையினை முன்மொழிந்துள்ளன. அரசன், வாணிகன், குயவன், ஆசிரியர், கணக்காளர் போன்ற பல்வேறு தொழில்களில் ஈடுபட்டிருந்தவர்களும் சங்க இலக்கிய உருவாக்கங்களில் தங்கள் பங்களிப்புகளை வழங்கினர். எடுத்துக்காட்டாக: மதுரை அறுவைவாணிகன் இளவேட்டனரினால் எழுதிய ஆறு பாடல்களும் (அகம் 56, 124, 230, 24, 272, 302) மேலும் மதுரை பண்டவாணிகன் இளந்தேவனாரால் எழுதப்பட்ட மூன்று பாட்டுகளும் (அகம் 8, 298, 328) மற்றும் மதுரைக்கூடலவாணிகன் சீத்தலைச்சாத்தனால் எழுதப்பட்ட ஐந்து பாடல்களும் (அகம் 54, 134, 229, 306, 320) அகநானூறுக்குள் உள்வாங்கப்பட்டுள்ளது. இந்த ஆய்வில் அகநானூறு, புறநானூறு, பெரும்பாண் ஆற்றுப்படை, பட்டினப்பாலை. மதுரைக்காஞ்சி, பொருநர் ஆற்றுப்படை, நற்றிணை, ஐங்குறுநூறு ஆகிய நூல்கள் பயன்படுத்தப்பட்டுள்ளன.

### சங்க இலக்கியங்களில் வணிகம்

பண்டைத்தமிழ் இலக்கியங்களின் வழியாக அவை இயம்பும் பண்பாட்டு ரீதியாக உருவாக்கப்பட்ட தமிழர்களின் வணிகத்தினையும் வணிக நடைமுறைகளினையும் பல பண்புக்கூற்று அடிப்படையில் இங்கு பார்கப்படுகின்றது. அவை முறையே:

- **பண்டமாற்று முறைமை**
- **உள்நாட்டு வணிக்ம்**
- **வெளிநாட்டு வணிகம்**
- **வரி முறைமை**
- **அடிப்படை வணிகக் கட்டமைப்புகள்**

### பண்டமாற்று முறைமை

ஆதி மனிதன் தனக்குத் தேவையானவற்றினை தானே வேட்டையாடியும், தானே பல்வேறு பிரதேசங்களிலிலிருந்து சேகரித்தும் தனது தேவையை சுயமாக பூர்த்தி செய்து கொண்டான். காலப்போக்கில் மனிததேவைகள் வளர்ச்சியடைய மனிதன் தமது தேவைகளைப் பூர்த்தி செய்ய பண்டமாற்று முறைமையினை ஒரு பரிமாற்று ஊடகமாக, முறைமையாகப் பயன்படுத்தினான்.பண்டமாற்று என்பது மக்கள் தமது தேவைகளைப் பூர்த்தி செய்வதற்கு ஒரு பொருளினைக் கொடுத்து மற்றொரு பொருளினை வாங்கும் முறையாகும். பண்டமாற்று முறையின் தொழிற்பாடு பணம் புழக்கத்தில் இல்லாத காலத்தில் மனிதனுடைய அடிப்படைத் தேவைகளில் முக்கியமான ஒன்றான உணவுத் தேவையைப் பூர்த்தி செய்ய உதவியது. குறிஞ்சி நிலமக்கள் மலைபடு பொருள்களினை மருதநில மக்களுக்குக் கொடுத்து நெல்லும் ஏனைய தானியங்களையும் பெற்றுக் கொண்டனர். அதுபோன்றே முல்லை நிலத்தில் வாழ்ந்த மக்கள் பால், தயிர், நெய்யினை நெய்தல் நிலமக்களுக்கு கொடுத்து அவர்களிடமிருந்து தமக்குத் தேவையான மீன், கருவாடு போன்றவற்றை பெற்றுக் கொண்டனர். சங்க காலத்தில் மாந்தர்கள் தம் உற்பத்தி செய்த பொருள்களை தமது பயன்பாட்டுக்கு பயன்படுத்தியது போக உபரியாக வந்தவற்றை தேவைப்பாடுடையவர்களுக்கு கொடுத்து அதன் பெறுமதிக்கு சமமானதை தமக்குத் தேவைப்படும் பொருள்களைப் பெற்றுக்கொண்டார்கள்.

இதற்கு இலக்கியங்களில் பல சான்றுகள் உண்டு. எடுத்துக்காட்டாக பரதவர் பாத்திகளில் விளைவித்த உப்பினை கொண்டு உப்பு வியாபாரத்தில் ஈடுபட்டனர். இவ்வாறு உப்பு வியாபாரத்தில் ஈடுபட்டவர்களினை உமணர், உமட்டியர், என்று அழைத்தனர். இவர்கள் ஊர் ஊராக உப்பினை எடுத்துச் சென்று வியாபாரத்தில் ஈடுபட்டனர். அம்முவனார் என்கின்ற புலவர் உப்பு விற்கும் பெண்ணைக் காதலிக்கும் ஒருவன் அவனைப்பற்றித் தன் நண்பனிடம் அவளையும், அவள் செய்யும் தொழிலையும் வர்ணிப்பது போல் அமைந்த பாடலில், பண்டமாற்றுக் குறித்த செய்திகளும் இடம்பெறுகிறது.

**நெல்லும் உப்பும் நேரே, ஊரீர்**
**கொள்ளீ ரோ' எனச் சேரிதொறும் நுவலும்**
(அகம்:390: 8 9)

நெல்லுக்கும் உப்புக்கும் ஒரே விதமான செலவாணி பெறுமதி வழங்கப்பட்டிருந்தது என்பதனை இப்பாடல்வாயிலாக வெளிப்படுகிறது. மேலும் ஐங்குறுநூறில் தலைவி கூற்றில் ஒரு செய்யுளில் நெய்தல் நிலமக்கள் மீன்களினை கொடுத்து நெல்லினைப் பெற்றார்கள் என்கிற செய்தியும்.

**சின்மீன் சொரிந்து, பல்நெல் பெறூஉம்**
**யாணர் ஊரநின் பாண்மகன் (ஐங்: 49- 23)**

ஐங்குறுநூறில் 47ஆவது செய்யுள் வாயிலாக மீனுக்குப் பதிலாக பயறு பண்ட மாற்றாய் பயன்படுத்தப்பட்டமையும் வெளிப்படுத்தப்படுகிறது.

- பண்டமாற்று முறையினால் முடியானவனுக்கும்சரி, குடியானவனுக்கும்சரி வருமானம் குறைவாகவே காணப்பட்டது.
- தேவையின் அடிப்படையில் பண்டமாற்றில் ஈடுபட்டவர்களுக்கு இடையே பெரும்பாலான சந்தர்ப்பங்களில் இரட்டை பொருந்துகைதன்மை காணப்பட்டது. ஆனாலும் பெறுமதியிடல் மிகச் சிக்கலானதாகவே காணப்பட்டது.
- ஐவகை நிலங்களில் வாழ்ந்த மக்கள் இனக்குழுக்கள் தமக்கே உரித்தான வாழ்வியல் மற்றும் பண்பாட்டு முறமையின் அடிப்படையில் பண்டமாற்றில் ஈடுபட்டனர். அங்கு அவர்களுக்கே உரித்தான பொருளாதாரப் பண்பாட்டு விழுமியங்கள் மேலோங்கியிருந்ததனை அவதானிக்கக் கூடியதாக இருந்தது. உதாரணமாக இங்கு ஓர் இடத்தில் கிடைத்த அல்லது விளைந்த பொருள்களில் தமது தேவைகளுக்கு மேலதிகமாக இருந்தவற்றை, அத்தகைய பண்டங்கள் கிடைக்கப் பெறாத இடத்தில் அல்லது விளையவைக்க முடியாத இடத்துக்கு பரிமாற்றிக் கொள்ளப்பட்டது.
- இங்கு இலாப நட்டம் என்ற கணக்கு இருந்ததாகத் தெரியவில்லை ஏனெனில் மேற்கூறிய சங்க இலக்கியங்களின் வாயிலாக நோக்கில் நெல்லுக்கு உப்பும் மற்றும் மீனும் பரிமாறப்பட்டிருந்தன எனவே இங்கே 'இலாப நட்டம்' என்கின்ற சித்தாந்தங்களைவிடுத்து இணைந்து செயற்பட்டு இன்புறுவோம்' என்கின்ற தமிழ்ப் பண்பாட்டியல் சித்தாந்தமே முதன்மை பெறுகின்றது. கால ஓட்டத்தில் உற்பத்திகளின் மிகைகள் உடைமை கொள்ளத்தக்க சொத்தாகவும், செல்வமாகவும் மாறிய காலகட்டத்தில் நாணயங்களின் புளக்கத்துக்கு முன்னர். தமிழர் இராச்சியங்களில் நிலையான அரசு உருவாக்கப்பட்ட பின்னர் தங்கம், வெள்ளி, நாணயங்களிளை அலகுகளாக கொண்டு நிறுத்தல் - அளத்தல் என்கின்ற அளவை முறையுடன் வியாபாரம் நடைபெற்றதாக தொன்மை இலக்கியங்கள் குறிப்பிடுகின்றன.

(தொடரும்..)

# காவடியாட்டம் அன்றும் இன்றும்!



தங்கராசா விதுஷன்
ஊடகக் கற்கைகள் துறை
யாழ்ப்பாணப் பல்கலைக்கழகம்

'காவடி' எனும் சொல்லானது 'காவுதடி' எனப் பொருள்படுகின்றது. காவுதடி எனும் சொல் மருவி உருவாகியதாகவே 'காவடி' என்று கருதப்படுகின்றது. காவடியினுடைய உண்மையான தோற்றம் தொடர்பாக உறுதியான தகவல்கள் எதுவும் கிடைக்கப் பெறவில்லை. இலங்கையிலும், தமிழ் நாட்டிலும் குறிப்பதாகத் தமிழர் வாழுகின்ற பல்வேறுபட்ட நாடுகளிலும் உள்ள முருகன் கோவில்களில் வழிபாட்டின் ஒரு முக்கியமான கூறாக காவடியாட்டம் காணப்படுகின்றது. மக்கள் ஏதெனும் ஒரு விடயத்தை மனதில் வைத்து அவ் விடயம் நடந்தால் காவடி எடுப்பதாக நேர்த்தி வைப்பார்கள். காஅடி எனப்படுவது காவாகச் சுமக்கப்படுகின்ற முருகப் பெருமானின் திருவடிகளைக் குறித்து நிற்கின்றது. 'கா' என்பது இருபுறமும் தொங்கும் சுமையைக் குறித்து நிற்கின்றது. 'காவடியாட்டம்' என்பது 'காவடி' 'ஆட்டம்' என்ற இரு சொற்களினுடைய இணைப்பினால் உருவாகியுள்ளது.

இன்றைய காலத்தில் காவடிகள் பல்வேறுபட்ட முறைகளில் அழகுணர்ச்சியுடன் உருவாக்கப்படுகின்றது. அத்துடன், பால்க் காவடி, பன்னீர்க் காவடி, மச்சக் காவடி, சர்ப்பக் காவடி, வேல்க் காவடி, வெள்ளிக் காவடி, கரகக் காவடி, தாளக் காவடி, பாட்டுக் காவடி, சாக்குக் காவடி, நட்சத்திரக் காவடி, வேல் கூழக் காவடி, சயினக் காவடி, ஆஞ்சநேயர் காவடி, ஐயனார் காவடி, ஆபரணக் காவடி, சந்தனக் காவடி, தயிர்க் காவடி, தேன் காவடி போன்ற பல்வேறுபட்ட வகைகளில் காவடி அமைந்திருப்பதனைக் காணலாம். ஆரம்பத்தில் முருகப் பெருமானை நினைத்து ஆரம்பிக்கப்பட்ட காவடி மரபு இன்று அம்மன், பிள்ளையார், ஐயனார் போன்ற சகல தெய்வங்களுக்கும் காவடி எடுக்கின்ற விதமாக மாற்றமடைந்துள்ளது. ஆரம்பத்தில் நேர்த்திகளை மையமாக வைத்தும், சடங்கியல் சார்ந்து பக்தி பூர்வமாக அனுஷ்டிக்கப்பட்டுவந்த காவடியாட்டமானது இன்று தொழில் முறைக் காவடியாட்டமாகவும் கரகாட்ட நிகழ்வின் ஒரு பகுதியாகவும் இடம்பெற்றுவருவதனைக் காணலாம். காவடியாட்டத்தினுடைய முக்கியமான கலைஞர்களாக காவடி கட்டுபவர், காவடி ஆட்டுபவர், உடுக்குப் பாடல் பாடுபவர்கள், தவில், நாதஸ்வர கலைஞர்கள், பாட்டுக்காரர் போன்ற கலைஞர்களே காணப்படுகின்றனர். காவடியாட்டத்தில் இன்று சில மாற்றங்கள் ஏற்பட்டிருப்பதனைக் காணலாம்.

குறிப்பாக இன்றைய கால கட்டத்தில் தொடர்பாடல் தொழில்நுட்ப வளர்ச்சியும், ஏனைய தொழில்நுட்பங்களும் வளர்ச்சியடைந்திருப்பதனால் இறைவனுடன் மனிதன் செலவழிக்கின்ற நேரமும், நம்பிக்கையும் குறைவடைந்துள்ளது என்றே குறிப்பிடவேண்டும். காவடியாட்டத்தின் போது இசைக்கருவிகள் வாசிக்கின்ற தன்மையிலும் மாற்றங்கள் ஏற்பட்டுள்ளன. நாதஸ்வர இசைகளில் பக்திமயமான பாடல்கள் வாசிக்கப்பட்டன இன்று இளைஞர்களிடையே சினிமா மோகம் காணப்படுவதனால் சினிமாப் பாடலினுடைய ஊடுருவல் காவடியாட்ட நாதஸ்வர இசைகளில் இடம்பெற்றுள்ளது.

காவடி ஆடுகின்ற முறைமை, ஆடைகள் அணிகின்ற தன்மைகளிலும் மாற்றம் ஏற்பட்டுள்ளது. சினிமாப் பாடல்களுக்கு எவ்வாறு ஆடுவார்களோ அதே போன்று காவடியாடுவதற்கும் முனைகின்றனர். மற்றும் சடங்கியல் முறைக்காக காவடி எடுப்பது குறைவடைந்து 'அவன் காவடி எடுக்கிறான் நானும் காவடி எடுப்பம்' என்று போட்டிக்காக காவடி எடுப்பதனையும் காணலாம். காவடியின்போது மது பாவித்து ஆடுகின்ற போக்கு நிலவியுள்ளது. அதுவும் காவடியாட்டத்தினுடைய புனிதத் தன்மையைக் குறைக்கின்றது. மற்றும் குறிப்பிட்ட காலத்துக்கு முன்பாக காவடியில் ஓர் ஒற்றுமைத்தன்மை பேணப்பட்டது. காவடி என்றால் ஊர்மக்கள் எல்லோரும் அதில் பங்கேற்பார்கள். ஆனால், இன்று ஒருவருக்கொருவர் போட்டி, சண்டை போன்றவற்றால் இந்த நிலை மாறியுள்ளதனை அவதானிக்கலாம். காவடியாட்டம் என்பது புனிதத்தன்மைமிக்கது. அதைக் கட்டிக்காத்து சந்ததிகளுக்குக் கடத்த வேண்டியது எம் அனைவரினதும் தலையாய பொறுப்பாகும்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## 5ஆம் ஆண்டு நினைவஞ்சலி



தோற்றம் 22 • 05 • 1945

மறைவு 23 • 09 • 2018

கடந்த 23.09.2018 அன்று இறைபதம் அடைந்த
எமது குடும்பத்தின் ஆணிவேர்

அமரர்

### சின்னையா நடராஜலிங்கம்

(ஓய்வுநிலை மாவட்ட முகாமையாளர்,
இலங்கை வங்கி, யாழ்ப்பாணம்)

எம் குடும்பத்தின் விருட்சமாய் இருந்து அன்பாக எம்மை அரவணைத்து
வாழ்க்கைப் பாதையிலே நாம் உயர நல் அறிவுரைகள் கூறி
எம்மை பக்குவமாய் வளர்த்தெடுத்த எமதருமை தந்தையே!
நீங்கள் எம்மை விட்டு பிரிந்து ஆண்டு ஐந்து ஆகியும்
அழியவில்லை உங்கள் நினைவுகள்.
இன்றும் எம்முடன் இருப்பது போல் மனக்கண்முன்
காட்சி அளிக்கின்றீர்கள்
எத்தனை ஆண்டுகள் ஆனாலும் உங்கள் நினைவுகள்
எம் நெஞ்சை விட்டு என்றும் நீங்காது.

உங்கள் ஆத்மா சாந்தியடைய இறைவனைப் பிரார்த்திக்கின்றோம்

குரும்பைகட்டி,
புலோலி வடமேற்கு.

நீங்காத்துயருடன்...
குடும்பத்தினர்

(CS 40637) N.1

## 10ஆம் ஆண்டு நினைவஞ்சலி



தோற்றம் 31 • 09 • 1958

மறைவு 03 • 09 • 2013

### விக்கினராசா ராஜமலர்

அன்பும் பண்பும் நிறைந்த எங்களது
அன்புத் தெய்வமே!
இன்ப வாழ்வில் இதயம் மகிழ்ந்திட
இனிக்கும் நினைவுகளுடனே
பத்தாண்டும் ஆயிற்றோ
நீவிர் எம்மைவிட்டுப் பிரிந்து?
சொந்தபந்தங்கள் வாழ்வாதாரமாய்
மகிழ்வுடன் வாழ்ந்திருக்க
உந்தனையே அர்ப்பணித்தீரே!
என்றும் உம்மை நினைந்தே
நாம் அஞ்சலி செய்கின்றோம்!
பெற்றிடுக சாந்தி ! ஓம் சாந்தி!

மானிப்பாய் மேற்கு,
மானிப்பாய்.

நினைவுகளுடன்
குடும்பத்தினர்

(CS 26185) A-1


## மாபிள் வேலை

உங்கள் வீடுகளுக்கு தரமான முறையில்
மாபிள் பதித்து தரப்படும்.
இழுத்து பதிக்க ஒரு சதுர அடி - 85 ரூபா

077 334 1281

## பணியாளர் தேவை

யாழ்நகரில் இயங்கும் நகை வியாபார
நிலையத்துக்கு அனுபவமுள்ள/ பழக விரும்பும்
நகை விற்பனையாளர்கள் தேவை.
காலை 10.00 மணி தொடக்கம் தொடர்பு
கொள்ளவும்.


076 247 0257

## சமையலாள் தேவை

யாழ். நல்லூர்க்கு அண்மித்த பகுதியில் சிறிய குடும்பத்திற்கு நன்கு சமையல் தெரிந்த சமையல் ஆள் தேவை.

தொடர்பு இல:
075 873 4301


## இதய அஞ்சலி



தவப்பேறு 30.10.1939

சிவப்பேறு 26.09.2023

உள்ளத்தால், உழைப்பால், உன்னத தொண்டால்
உயர்ந்த உத்தமர் தெல்லிப்பழை தேசகீர்த்தி
தொழிலதிபர்

**லயன் உயர்திரு ச. ஆறுமுகநாதன்**
அவர்கள்

(உப தலைவர், ஸ்ரீ துர்க்காதேவி தேவஸ்தானம்)

எங்கள் தேவஸ்தான வளர்ச்சியில் கடந்த அறுபது ஆண்டுகளுக்கு மேல் அர்ப்பணிப்போடு தொண்டாற்றிய பெருமகனை யாம் இழந்து தவிக்கிறோம்.
ஈர நெஞ்சுடைய, இரக்கம் நிறைந்த மானிடம் ஏழை பங்காளன் எவர்க்கும் உதவும் வள்ளல் ஆலய அன்ன தானப்பணி, திருப்பணி, மகளிர் இல்லப் பிள்ளைகளின் வாழ்வியல் பணி, நல்லூர் துர்க்கா மணி மண்டபப் பணி அனைத்திலும் உங்கள் உன்னத பங்களிப்பை நீள நினைத்து வணங்குகின்றோம்.
அம்பாள் திருவடியில் அணையா விளக்காய் நிலைத்திட வேண்டுகின்றோம்.

துர்க்காபுரம் மகளிர் இல்லம், தெல்லிப்பழை
நிர்வாக சபை ஸ்ரீ துர்க்காதேவி தேவஸ்தானம், தெல்லிப்பழை.

(CR 40656) A-1

## மரண அறிவித்தல்



### திருமதி தங்கராசா இராசலட்சுமி

யாழ். உரும்பிராய் கிழக்கை பிறப்பிடமாகவும் இராசவீதி, கோப்பாயை வதிவிடமாகவும் கொண்ட திருமதி தங்கராசா இராசலட்சுமி அவர்கள் நேற்று (26.09.2023) செவ்வாய்க்கிழமை காலமானார்.

அன்னார் தம்பையா தங்கராசா (ஓய்வுபெற்ற மலேரியாத் தடை வெளிக்கள உத்தியோகத்தர்) அவர்களின் பாசமிகு மனைவியும், காலஞ்சென்றவர்களான செல்லையா - தங்கம்மா தம்பதியரின் அன்பு மகளும், காலஞ்சென்றவர்களான தம்பையா - முத்தம்மா தம்பதியரின் அருமை மருமகளும், அனுசுஜா (கனடா), உஷா (கனடா), சுதாகரன் (முகாமையாளர், இலங்கை வங்கி வல்வெட்டித் துறை) ஆகியோரின் பாசமிகு தாயாரும், புஸ்பராஜா (கனடா), ஜசிந்தன் (கனடா), சிவசக்தி (அபிவிருத்தி உத்தியோகத்தர், நல்லூர் பிரதேச சபை) ஆகியோரின் பாசமிகு மாமியாரும், கால்ஞ்சென்றவர்களான பரமலிங்கம், சீவரத்தினம், திருப்பதி, இராசரத்தினம் ஆகியோரின் அன்புச் சகோதரியும், காலஞ்சென்றவர்களான செல்லம்மா, கார்த்திகேசு, மகேஸ்வரி மற்றும் சம்பந்தன் (கனடா) ஆகியோரின் மைத்துனியும், சாயீசன், அஸ்வின், ஜஸ்வினி, பிரணவிகா (யா/வேம்படி மகளிர் உயர்தரப் பாடசாலை), சாத்விகா (யா/யாழ். இந்து ஆரம்ப பாடசாலை ) ஆகியோரின் அன்பு பேர்த்தியும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் இன்று (27.09.2023) புதன்கிழமை நண்பகல் 12.00 மணியளவில் அவரின் இல்லத்தில் இடம்பெற்று, பூதவுடல் தகனக் கிரியைகளுக்காக திருநெல்வேலி இந்து மயானத்திற்கு எடுத்துச்செல்லப்படும்.

இவ் அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக் கொள்ளுமாறு கேட்டுக்கொள்கின்றோம்.

'இராஜ கிரி',
இராசவீதி, கோப்பாய் தெற்கு,
கோப்பாய்.

தகவல்: குடும்பத்தினர்
077 990 6813
076 047 0910

(CS 26128) A-1

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# வீரசேகரவுக்கு விசா வழங்க பின்னடிக்கிறது அமெரிக்கா



கொழும்பு, செப்.27
அமெரிக்காவின் வொஷிங்டனில் அடுத்தமாத இறுதியில் நடைபெறவுள்ள மாநாட்டில் கலந்துகொள்வதற்காக நுழைவிசைவுக்கு விண்ணப்பித்த தேசியப் பாதுகாப்புத் தொடர்பான நாடாளுமன்ற துறைசார் மேற்பார்வைக் குழுவின் தலைவர் சரத் வீரசேகரவுக்கு நுழைவிசைவு வழங்குவதை அமெரிக்கா தவிர்த்து வருகின்றது என்று தகவல்கள் வெளியாகியுள்ளன.

யு.எஸ்.டி.ஏ. மற்றும் ஜனநாயகத்துக்கான தேசிய நிறுவனம் ஆகியவை தற்போதைய நாடாளுமன்றத்தில் செயல்படும் ஒவ்வொரு துறைசார் மேற்பார்வைக் குழுவின் தலைவர்களையும் வொஷிங்டனுக்கு பத்து நாள் பட்டறைக்கு அழைத்துச் செல்ல திட்டமிட்டுள்ளன.

அதற்காக துறைசார் மேற்பார்வைக் குழுவின் அனைத்து தலைவர்களும் நுழைவிசைவைப் பெறவேண்டும் என்று அமெரிக்கா கூறுகிறது.

ஆனால், தேசியப் பாதுகாப்பு மேற்பார்வைக் குழுவின் தலைவருக்கு குறிப்பிட்ட காலப்பகுதிக்குள் நுழைவிசைவு வழங்கப்படவில்லை.

அதையடுத்து வொஷிங்டன் விஜயத்துக்கான துறைசார் மேற்பார்வைக் குழுவின் தலைவர்கள் பட்டியலில் இருந்து தேசியப் பாதுகாப்பு தொடர்பான நாடாளுமன்ற துறைசார் மேற்பார்வைக் குழுவின் தலைவர் சரத் வீரசேகரவின் பெயர் நீக்கப்பட வேண்டும் என்றும், வேறு ஒருவரின் பெயர் குறிப்பிடப்பட வேண்டும் என்றும் செயலமர்வு ஏற்பாட்டாளர்கள் தெரிவித்துள்ளனர்.

இது தொடர்பில் சபாநாயகரிடம் முறைப்பாடு செய்யப்படவுள்ளது என்று நாடாளுமன்ற உறுப்பினர் சரத் வீரசேகர தெரிவித்துள்ளார். (ஏ-இ)



## திலீபனின்...

தியாகதீபம் திலீபனின் தியாக வேள்வி தொடர்பான ஆற்றுகை நிகழ்வொன்று முல்லைத்தீவு - சுதந்திரபுரத்தில் நேற்று முன்னெடுக்கப்பட்ட திலீபனின் அஞ்சலி நிகழ்வில் நிகழ்த்திக் காட்டப்பட்டுள்ளது. இந்த ஆற்றுகை திலீபனையும் அவனின் தியாக வேள்வியையும் அடுத்த சந்ததிக்கு இலகுவாகக் கடத்தும் முயற்சியாகவும் அமைந்தது.

வடமாகாணசபை முன்னாள் உறுப்பினர் துரைராசா ரவிகரன், கரைதுறைப்பற்று பிரதேசசபை முன்னாள் உறுப்பினர் இரத்தினம் ஜெகதீசன், சமூக ஆர்வலர்கள் பொதுமக்கள் எனப் பலரும் இந்த நிகழ்வில் கலந்து கொண்டனர். (அ-ம-246)

## தியாக திலீப...

தியாகதீபம் திலீபன் பிறந்த இடமான ஊரெழுவில் உள்ள அவரது இல்லத்தில் நேற்றுக் காலை நடைபெற்ற அஞ்சலி நிகழ்வுகளைத் தொடர்ந்து காலை 8 மணியளவில் ஊரெழுவிலிருந்து நல்லூர் கிட்டுப் பூங்கா நோக்கித் தியாக தீபம் திலீபனின் நினைவுகளைத் தாங்கிய ஊர்திப் பவனி ஆரம்பமாகியது. ஊர்திப் பவனி பலாலி வீதியூடாக திருநெல்வேலிச் சந்தியை அடைந்து ஆடியபாதம் வீதியூடாக கல்வியங்காட்டினை அடைந்து பின்னர் பருத்தித்துறை வீதியூடாக நல்லூர் கிட்டுப் பூங்காவினை அடைந்தது.



அதனைத் தொடர்ந்து காலை 9.45 மணியளவில் கிட்டுப் பூங்காவிலிருந்து நல்லூர் நினைவுத் தூபி நோக்கி நடைபவனி ஆரம்பமானது. முற்பகல் 10.10 மணியளவில் திலீபனின் நினைவுத் தூபியை, நடைபவனி சென்றடைந்தது. நல்லூரில் அமைந்துள்ள தியாகதீபம் திலீபனின் நினைவுத் தூபியடியில் திலீபன் உண்ணாவிரதமிருந்து உயிர்நீத்த நேரமான முற்பகல் 10.48 மணியளவில் மூன்று மாவீரர்களின் தாயாரும், நாட்டுப் பற்றாளர் வடிவேல் நேசத்தின் துணைவியாருமான திருமதி வடிவேல் நேசம் பொதுச்சுடர் ஏற்றி அஞ்சலித்தார். சமநேரத்தில் திலீபன் உண்ணாவிரதமிருந்த நல்லூர்க் கந்தன் ஆலய வடக்கு வீதியிலும் ஈகச் சுடர் ஏற்றி அஞ்சலி செலுத்தப்பட்டது. அதனைத் தொடர்ந்து தியாக தீபத்தின் உருவப்படத்துக்கு மலர் மாலைகள் அணிவிக்கப்பட்டு, மலர்கள் தூவி அஞ்சலி செலுத்தப்பட்டது. தியாக தீபம் திலீபனுக்கு அஞ்சலி செலுத்தும் முகமாகத் தென்மராட்சியிலிருந்து இரண்டு தூக்குக் காவடிகள் நினைவிடத்துக்கு வந்ததுடன் பல்வேறு பகுதிகளிலிருந்தும் நினைவிடத்துக்கு நான்கு ஊர்திப் பவனிகளும் வருகை தந்திருந்தன. கொட்டும் மழையையும் பொருட்படுத்தாமல் முன்னாள் போராளிகள், காணாமல் ஆக்கப்பட்டவர்களின் உறவுகள், தமிழ்த் தேசிய அரசியல்வாதிகள், சிவில் சமூகச் செயற்பாட்டாளர்கள், இளையோர், பொதுமக்கள் எனப் பெருமளவானோர் கலந்துகொண்டு தியாகதீபம் திலீபனுக்கு உணர்வுபூர்வமாக அஞ்சலி செலுத்தினர். திலீபனின் நினைவுத் தூபிக்கு அருகில் தற்காலிகமாக அமைக்கப்பட்டிருந்த திலீபனின் ஆவணக் கண்காட்சிக் கூடத்திலும் அஞ்சலி நிகழ்வுகள் இடம்பெற்றன. அத்துடன் இதனருகே திலீபனின் நினைவுகளைச் சுமந்து தாகம் தீர்க்கும் பணியும் மேற்கொள்ளப்பட்டது. நினைவேந்தல் நிகழ்வில் பங்குகொண்டோருக்கு பயன்தரு மரங்களும் வழங்கப்பட்டன. அஞ்சலி நிகழ்வுகளில் ஏராளமான இளைஞர்கள் மற்றும் சிறுவர்களும் ஆர்வத்துடன் கலந்துகொண்டனர்.

(அ-ம-27,26,66,150,20,246,125)

## திலீபனை...

கோட்டன் மண்டபத்தில் இடம்பெறவிருந்த நிலையில், நீதிமன்றம் ஊடாக திருகோணமலை துறைமுகப் பொலிஸாரால் குறித்த நிகழ்வுக்குத் தடை விதிக்கப்பட்டது.

குறித்த தடைக்கட்டளை மண்டபத்தில் கூடியிருந்தவர்களுக்கு வழங்கப்பட்டதையடுத்து திலீபனை மனதிலிருத்தி கதிரைக்கு மலர்மாலை அணிவித்து சுடர் ஏற்றி மக்கள் அஞ்சலித்தனர்.

(அ-ம-27,50)

## பாதுகாப்பு...

தியாக தீபம் திலீபன் உண்ணாநோன்பிருந்து உயிர்நீத்த சமநேரத்தில் பலாலியில் அமைந்துள்ள இந்திய இராணுவ நினைவிடத்தில் கொழும்பிலுள்ள இலங்கைக்கான இந்தியத் தூதரகத்தின் அதிகாரியொருவர் தலைமையிலான குழுவினர் நேரில் ஆய்வுப் பணிகளை மேற்கொண்டுள்ளனர். கேணல் பிரணித் சுசில் தலைமையிலான குழுவினரே நேற்று முற்பகல் 10.30 மணியளவில் பலாலியில் உள்ள இந்திய இராணுவத்தின் நினைவிடத்தில் ஆய்வுப் பணிகளை மேற்கொண்டுள்ளனர். அந்தக் குழு எதற்காக ஆய்வுப் பணிகளை மேற்கொண்டது என்பது தொடர்பான தகவல்கள் உத்தியோகபூர்வமாகத் தெரிவிக்கப்படவில்லையாயினும், அநேகமாக அபிவிருத்திப் பணிகளை (தூபி கட்டுமானங்களை) மையமாகக் கொண்ட ஆய்வாக இது இருக்கலாம் என்று கருதப்படுகின்றது.

(அ-ம-26)

## போர்க்குற்றம்...

சித்திரவதைக்கு எதிரான சர்வதேச உடன்படிக்கையின் அடிப்படையில் இலங்கை மீது நடவடிக்கை எடுக்கப்படுவதை அமெரிக்க வெளிவிவகார அமைச்சர் அன்ரனி பிளின்கின் உறுதி செய்யவேண்டும் - இவ்வாறு அமெரிக்க நாடாளுமன்ற உறுப்பினர்கள் 12 பேர் அவசரக் கடிதம் ஒன்றை அனுப்பி வைத்துள்ளனர்.

இலங்கையில் அரச படைகள் மற்றும் இதர அரச அமைப்புகளால் தமிழர்கள் எதிர்கொண்ட கொடூரமான சித்திரவதைகள் குறித்து தமது கடிதத்தில் அவர்கள் விவரித்துள்ளனர்.

அமெரிக்க நாடாளுமன்ற மக்களவையில் பென்சில்வேனியா மாநிலத்திலிருந்து தெரிவான ஜனநாயகக் கட்சியின் உறுப்பினர் சம்மர் லீ அம்மையாரின் தலைமையில் வரையப்பட்டுள்ள இந்தக் கடிதத்தில் மேலும் உள்ளதாவது:-

'இலங்கையில் தமிழ் மக்களுக்கு எதிராக இடம்பெற்ற பெரும் மனித உரிமை மீறல்கள் மற்றும் சர்வதேச மனித உரிமைகள் சட்டங்களை மீறி நடந்து கொண்டமை ஆகியவற்றுக்காக இலங்கை சர்வதேச நீதிமன்றத்தில் முறையாக நிறுத்தப்படவேண்டும். ஐக்கிய நாடுகளின் சித்திரவதைக்கு எதிரான தீர்மானத்தின் கீழ் இலங்கை மீது அமெரிக்க வெளிவிவகார அமைச்சு சட்டரீதியாக நடவடிக்கை எடுக்கவேண்டும்.

எமது அபிப்பிராயத்தில், இலங்கையில் ஏற்பட்டுள்ள பொருளாதார மற்றும் அரசியல் நெருக்கடிகள் ஆகியவற்றைக் காரணம் காட்டி தவறிழைத்தவர்கள் சட்டத்தின் முன் நிறுத்தப்படாமல் இருப்பதானது அமெரிக்கா கடைப்பிடித்து வரும் மனித உரிமைகள், அதன் ஜனநாயக விழுமியங்கள் மற்றும் அர்ப்பணிப்புக்கு எதிரானதாகும்.

இலங்கை அரசும் அதன் இராணுவமும் விடுதலைப் புலிகளுக்கு எதிரான போரில் நம்பத்தகுந்த வகையில் பெருமளவில் சர்வதேச குற்றங்களைச் செய்துள்ளனர். அதிலும் குறிப்பாக, கடந்த 2009 ஆம் ஆண்டு ஜனவரி தொடக்கம் மே மாதம் வரை, இலங்கை இராணுவம் திட்டமிட்டு வேண்டுமென்றே தமிழ் பொதுமக்கள் மீதும், அவர்களின் இருப்பிடங்கள் மீதும் கடும் ஷெல் தாக்குதல்களை நடத்தியது. அதிலும் மருத்துவமனைகள் மற்றும் அரசால் போர் நிறுத்த வலயம் என்று அறிவிக்கப்பட்ட பகுதிகளிலும் இத்தாக்குதல் இடம்பெற்றது.

இலங்கையின் அரச படைகள் நூற்றுக் கணக்கான தமிழ்ப் பெண்கள் மற்றும் யுவதிகளைக் கொலை செய்வதற்கு முன்னரோ அல்லது அதற்குப் பிறகோ பாலியல் பலாத்காரம் மற்றும் வன்புணர்ச்சி செய்தனர். பெரும் மனித உரிமை மீறல்களைச் செய்தவர்களை சட்டத்தின் முன்னால் நிறுத்துவதற்குப் பதிலாக, அவர்களுக்குப் பதவி உயர்வு போன்ற மதிப்பளிப்புகளைச் செய்யும் கலாசாரம் இலங்கையில் நிலவுகிறது.

இந்தக் குற்றச்சாட்டுகளை சுயாதீனமாக விசாரணை செய்து அவர்களைச் சட்டத்தின் முன் நிறுத்துவதற்குப் பதிலாக, போர்க்குற்றம் சாட்டப்பட்ட பலருக்கு இலங்கை அரசாங்கம், அரச நிர்வாகம் அல்லது இராணுவத்தில் உயர் பதவிகள் அளித்து கௌரவித்தது. அதில் சிலர் இன்றும் பதவியில் உள்ளனர்.

நீதிபரிபாலனம், சட்டத்தின் ஆட்சி மற்றும் பொறுப்புக்கூறல் ஆகியவற்றில் கணிசமான முன்னேற்றத்தை ஏற்படுத்த, தொடர்ச்சியாக வந்த அரசாங்கங்கள் தவறிவிட்டன. அதனால் அமெரிக்காவின் வெளிவிவகார அமைச்சு சித்திரவதைகளுக்கு எதிரான ஐ.நா. தீர்மானம் பிரிவு 30இன் கீழ் அந்த விதிகளை மீறியதற்காகவும், அந்த விதியின் கீழான தனது கடப்பாடுகளை நிறைவேற்றாமல் இருப்பதற்காகவும் இலங்கை அரசு மீது முறைப்படியான நடவடிக்கையை எடுக்க வேண்டும் - என்றுள்ளது. (அ-ம-44)

Digitized by Noolaham Foundation
noolaham.org | aavanaham.org

## காணி விற்பனைக்கு

யாழ்ப்பாணம் பலாலி வீதி, திருநெல்வேலி சந்திக்கு அருகாமையில் 5 பரப்பு 3.5 குழி காணியுடன் பாரிய களஞ்சிய வசதி அமையப்பெற்ற காணி விற்பனைக்கு உள்ளது.

தொடர்பு இல: 077 3866 250

## காணி விற்பனைக்கு

புத்தூர் மீசாலை வீதியில் வேம்பிராய் சந்தியி லிருந்து 100m தூரத்தில் 19 1/2 பரப்புக் காணி விற்பனைக்கு உண்டு. தரகர் இல்லை.

(cs 309741) (n.1)

Phone No. 077 924 0502
Email - gunavathanyk@gmail.com

## காணி விற்பனைக்கு உண்டு

யாழ்ப்பாணம் நாவற்குழியில் 33 பரப்பு (நிலப்பரப்பு) விற்பனைக்கு உண்டு.

* வீடு கட்டுவதற்கும், களஞ்சியசாலைகள் அமைப்பதற்கும் நல்ல சூழல்
* நாவற்குழி சந்தியிலிருந்து 1/2 கிலோ மீற்றர் தூரம்
* A-9 வீதியிலிருந்து 200 மீற்றர் தூரம்
* யாழ். பஸ் நிலையம் 3 1/2 கிலோமீற்றர் தூரம்
* இரண்டு பரப்பாக பிரிக்கப்பட்ட நிலையில்
* நன்னீர் ஊற்று
* ஒரு பரப்பின் விலை 3 இலட்சம் ( 300000/=)
* தரகர் தேவையில்லை

தொடர்பு:- 077 6234 204
076 7558 606
077 076 0389

(CS 26380) A-1

## மரண அறிவித்தல்

தோற்றம் 19 . 11 . 1958



மறைவு 26 . 09 . 2023

### கிருபாமூர்த்தி கலானந்தி

யாழ் குரும்பசிட்டி றோட், கட்டுவனை பிறப்பிடமாகவும் பட்டியோலை உடுவில் தெற்கு சுன்னாகத்தை வசிப்பிடமாகவும் கொண்ட கிருபாமூர்த்தி கலானந்தி அவர்கள் நேற்று (26.09.2023) செவ்வாய்க்கிழமை காலமானார்.

அன்னார் காலஞ்சென்ற பரமானந்தம் மகேஸ்வரி அவர்களின் அன்பு மகளும் காலஞ்சென்ற கிருபாமூர்த்தி அவர்களின் பாசமிகு மனைவியும் யோகனந்தி, பிறேமானந்தம் (பிரான்ஸ்), தயானந்தி (லண்டன்), ஜீவானந்தி, மகேந்திரன் (பிரான்ஸ்) ஆகியோரின் பாசமிகு சகோதரியும் பிரசாந்தனின் அன்புத்தாயாரும் லோகிதாவின் அன்பு மாமியாரும் ஆதிரா, ஆகிர்தன் அவர்களின் அன்பு பேத்தியும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் இன்று (27.09.2023) புதன்கிழமை முற்பகல் 11.00 மணியளவில் அவரது இல்லத்தில் நடைபெற்று மானிப்பாய் பிப்பிலி இந்து மயானத்தில் தகனக்கிரியைகள் இடம்பெறும்.

இவ்வறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக் கொள்ளுமாறு கேட்டுக்கொள்கின்றோம்.

தொடர்பு - பிரசாந்தன் : 077 9309 266
சாந்தி : 076 2504 756

தகவல்:
குடும்பத்தினர்.

(CS 263881)M-1

## கொழும்பு விலையில் யாழ்ப்பாணத்தில் கோழிகள் மலிவான விலையில் பெற்றுக்கொள்ளலாம்.

* 24 மணிநேர சேவை (இரவு - பகல்)
* 33 வருட கால முட்டை, கோழிகள் விற்பனையில் நிலைமாறா பண்ணையாளர்
* புறோயிலர், பேரன்ஸ், கல்பேட்ஸ், ஊர்கோழி சேவல், விறத்துக்குஞ்சுகள், முட்டை இவை அனைத்தும் தேவைக்கு ஏற்ற அளவு பெற்றுக்கொள்ளலாம். புறோயிலர் சில்லறை விலை 1100/ -. மொத்த விலை 1000/- சுத்தம் செய்யப்பட்ட இறைச்சி இவை தவிர சுத்தம் செய்யபடாமல் புறோயில் 1 Kg - 720/ -

வியாபாரிகள், கொட்டல் தேவைகள் சிறந்த கழிவுடன் பெற்றுக்கொள்ளலாம்.

தொடர்பு:- நியூசிற்றி பாம்
நியூ சிற்றி கோழிக்கடை
இல. 08, சின்னக்கடை மாக்கற்,
குருநகர், யாழ்ப்பாணம்.

## மரண அறிவித்தல்

பிறப்பு 30 • 10 • 1939



இறப்பு 26 • 09 • 2023

### சரவணமுத்து ஆறுமுகநாதன்

(தொழில் அதிபர், உபதலைவர் - தெல்லிப்பழை துர்க்காதேவி தேவஸ்தானம் )

தெல்லிப்பழையை பிறப்பிடமாகவும் வதிவிடமாகவும் கொண்ட தேசகீர்த்தி லயன் திரு. சரவணமுத்து ஆறுமுகநாதன் அவர்கள் நேற்று (26.09.2023) செவ்வாய்க்கிழமை இறைபதம் அடைந்தார்.

அன்னார் காலஞ்சென்ற சரவணமுத்து அன்னப்பிள்ளை தம்பதிகளின் இளைய புத்திரனும் காலஞ்சென்றவர்களான கந்தையா ஆசைப்பிள்ளை அவர்களின் அன்பு மருமகனும் நகுலேஸ்வரியின் அன்புக் கணவரும் ஜனார்த்தனன் ( Jana Civil Engineering Construction) அவர்களின் அன்புத் தந்தையும் கஜனி (Pharmacist) அவர்களின் அன்பு மாமனாரும் விபூஷனன், கேதுஷன் (யா/ இந்துக்கல்லூரி மாணவர்கள்) ஆகியோரின் பேரனும் காலஞ்சென்றவர்களான சரஸ்வதி, அன்னபூரணம் மற்றும் இராசம்மா (புன்னாலைக்கட்டுவன்), சிவசுப்பிரமணியம் (பன்னாலை), பரஞ்சோதி (தெல்லிப்பழை) ஆகியோரின் அன்புச் சகோதரனும் மல்லாகத்தை சேர்ந்த தம்பித்துரை மகேஸ்வரி ஆகியோரின் சம்பந்தியும் காலஞ்சென்றவர்களான இராசம்மா, மகேஸ்வரி மற்றும் திருஞானசம்மந்தமூர்த்தி (வட்டுக்கோட்டை), சிவசோதிலிங்கம் (கொல்லங்கலட்டி) மற்றும் காலஞ்சென்றவர்களான அம்பலவாணர்,நாகரத்தினம், தம்பிராசா, உமாபதிதேவி மற்றும் தவநாதன் ஆகியோரின் மைத்துனரும் காலஞ்சென்றவர்களான சுப்பிரமணியம், பாலசிங்கம் மற்றும் பத்மலீலா காலஞ்சென்ற இந்திராதேவி ஆகியோரின் உடன்பிறவா சகோதரனும் சிவபாலன் காலஞ்சென்ற சோதிலிங்கம் மற்றும் ஸ்கந்தராசா, அருந்ததிதேவி, திருவருட்செல்வி, சத்தியசீலன், குணரட்ணம், அரசரத்தினம், கலாதேவி, புனிதவதி, தயனொளிபவன், சிவனொளிபவன், சகுந்தலாதேவி, சுமதி, அனந்தீசன், கிருஸ்ணதாஸ், உஷாநந்தினி, பத்மஜெயன், காலஞ்சென்ற சொரூபன் மற்றும் சிவரூபன் (சிவா), பரமரூபன், மயூரன், இராகுலன் ஆகியோரின் மாமனாரும் சயந்தன், முகுந்தன் ஆகியோரின் சிறிய தந்தையும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் இன்று (27.09.2023) புதன்கிழமை பிற்பகல் 01.00 மணியளவில் அவரது இல்லத்தில் நடைபெற்று பூதவுடல் தகனக்கிரியைக்காக மல்லாகம் கட்டுப்பிட்டி இந்து மயானத்திற்கு எடுத்துச் செல்லப்படும்.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்

கே. கே. எஸ் வீதி,
தெல்லிப்பழை.

(cs 26391) (M-1)

தகவல்:
மகன் ஆ. ஜனார்த்தனன்

## மரண அறிவித்தல்

தோற்றம் 13 • 11 • 1946



மறைவு 25 • 09 • 2023

### திருமதி நேசதுரை விஜயலட்சுமி

யாழ். பாண்டியன்தாழ்வைப் பிறப்பிடமாகவும் வசிப்பிடமாகவும் கொண்ட நேசதுரை விஜயலட்சுமி நேற்றுமுன்தினம் (25.09.2023) திங்கட்கிழமை காலமானார்.

அன்னார் காலஞ்சென்றவர்களான வடிவேற்கரசு (ஓய்வு பெற்ற - இராணுவ றெஜிமென்றல் சார்ஜன்ட் மேஜர்) பொன்றோஸ் தம்பதியரின் அன்பு மகளும், காலஞ்சென்றவர்களான தம்பிராஜா புஸ்பவதி தம்பதியரின் பாசமிகு மருமகளும், காலஞ்சென்ற நேசதுரையின் (ஓய்வுபெற்ற கடற்படை உத்தியோகத்தர்) அன்பு மனைவியும், வத்சலாதேவி, ஜெனார்த்தனன் (ஆசிரியர் - மாதகல் சென் ஜோசப் ம.வி) ஆகியோரின் அன்புத் தாயாரும், காலஞ்சென்றவர்களான மங்கயற்கரசி, வேலாயுதபிள்ளை, சதாலட்சுமி, சகாயலட்சுமி மற்றும் சந்திரலேகா, விக்னேஸ்வரி (கனடா) நீற்றா, நீலாம்பிகை (ஜேர்மன்) ஆகியோரின் அன்புச் சகோதரியும், யாழினியின் (ஆசிரியர் - சண்டிலிப்பாய் இந்துக் கல்லூரி) அன்பு மாமியாரும், ஜனனிகாவின் அன்புப் பேர்த்தியும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் இன்று (27.09.2023) புதன்கிழமை முற்பகல் 10.00 மணியளவில் 124/1, கொழும்புத்துறை வீதி, பாண்டியன்தாழ்வில் உள்ள அவரது இல்லத்தில் நடைபெற்று, பூதவுடல் தகனக்கிரியைக்காக கொழும்புத்துறை துண்டி இந்து மயானத்திற்கு எடுத்துச்செல்லப்படும். இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

தொடர்பு:
மகன் - 076 424 1146
மகள் - 075 561 6623

(cs 52288) (N-1)

தகவல்:
குடும்பத்தினர்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

இப்பத்திரிகை, நியூ உதயன் பப்ளிக்கேசன் (பிறைவேற்) லிமிட்ரெட் நிறுவனத்தினரால் யாழ்ப்பாணம் கஸ்தூரியார் வீதியில் 361 ஆம் இலக்கத்தில் உள்ள அவர்களது பணிமனையில் 27.09.2023 இல் அச்சிட்டு வெளியிடப்பெற்றது.